# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 | திருவள்ளுவர் ஆண்டு 2034 | மாசி - 21 | 05-03-2003 | புதன்கிழமை | ஓசை 15



நேரத்தை மீதப்படுத்த புடைவைத் தெரிவுக்கு வவுனியா நகரில்...

SHANDHA TEX

பஜார் வீதி, வவுனியா.

T.P:24-22879 (சீ-7649)


## கண்காணிப்புக் குழுத் தலைவர்கள் பிரபாகரன் இன்று சந்திப்பு!

தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்கள் போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் புதிய தலைவர் மேஜர் ஜெனரல் ரெலங்சனையும், விடைபெற்றுச் செல்லும் ரொன்ட் புருவ் ஹொவ்டேயையும் இன்று சந்தித்து உரையாடவுள்ளார். இச்சந்திப்பில் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்களும், தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் அவர்களும், அடேல் பாலசிங்கம் அவர்களும் கலந்துகொள்வர்.

## போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு புதிய தலைவர் மட்டு. விஜயம்!

போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் புதிய தலைவர் ரெலங்சன் நேற்று மட்டக்களப்பு மாவட்டத்திற்கு விஜயம் செய்து பாதுகாப்பு மற்றும் விடுதலைப் புலிகள் தரப்பு பிரதிநிதிகளைச் சந்தித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசமான கரடியனாறு சென்ற அவர் விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளில் ஒருவரான கேணல் கருணாவை 'தேனகம்' விருந்தினர் விடுதியில் சந்தித்துள்ளார்.

இச்சந்திப்பின் போது போர்நி

(08ஆம் பக்கம் பார்க்க)

### வடக்கு – கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட

# சிறுவர்களுக்கான செயற்திட்டங்களை வகுக்க விடுதலைப் புலிகள் - யுனிசெவ் முடிவு

### நேற்றைய பேச்சுக்களின் முடிவில் கூட்டறிக்கை

**ஐ.நா.சபையின் யுனிசெவ் அமைப்பும், விடுதலைப் புலிகள் இயக்கமும் வடக்கு - கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான செயற்திட்டங்களை வகுக்க முடிவு செய்துள்ளன. நேற்று கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளுக்கும், யுனிசெவ் பிரதிநிதிகளுக்கும் இடையில் நடந்த சந்திப்பில் இம்முடிவு எடுக்கப்பட்டதோடு இது தொடர்பான கூட்டறிக்கையும் விடப்பட்டது.**

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை யுனிசெப் அமைப்பின் பிரதிநிதிகள் நேற்று முற்பகல் சந்தித்து இவ்விடயம் குறித்துக் கலந்துரையாடி கூட்டறிக்கை ஒன்றையும் வெளியிட்டுள்ளனர். இச்சந்திப்பு விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் இடம்பெற்றது.

நேற்று முற்பகல் 11.00 மணி தொடக்கம் 12.00 மணிவரை ஒரு மணித்தியாலம் இச்சந்திப்பு இடம்பெற்றது. இச்சந்திப்பில் விடுதலைப் புலிகள் தரப்பில் தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்

(08ஆம் பக்கம் பார்க்க)

## களுத்துறைச் சிறைக்கைதிகள் ஏழுபேர் மயக்க மடையும் நிலை

(கொழும்பு)

தம்மை விடுதலை செய்யுமாறு கோரி களுத்துறை தமிழ் அரசியல் கைதிகள் நேற்று நான்காவது நாளாகவும் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 87 தமிழ் அரசியல் கைதிகளில் 61 கைதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

இவர்களில் ஏழு பேர் மயக்கமடையும் நிலையை அடைந்துள்ளனர். ஏனையவர்கள் உடல் சோர்வுற்ற நிலையிலுள்ளனர்.

தமது கோரிக்கை குறித்து அரசு உரிய நடவடிக்கை எடுக்காது விடின் நீர் அருந்துவதையும் நிறுத்தி சிறைச்சாலைக் கூரையின் மேல் ஏறி உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடரப்போவ

(08ஆம் பக்கம் பார்க்க)

### பெண்கள் விவகாரத்துக்கான

## உப குழுவின் முதற்கூட்டம் கிளி. யில் இன்று நடைபெறும்

பெண்கள் விவகாரத்துக்கான உப குழுவின் முதலாவது சந்திப்பு இன்று கிளிநொச்சியிலுள்ள புலிகளின் சமாதானச் செயலகத்தில் நடைபெறவுள்ளது. காலை 10.00 மணிக்கு ஆரம்பமாகும் இவ் உப குழுவின் சந்திப்பிற்கு அனுசரணையாளராக டாக்டர் அஸ்றிட் ஹேய் பேர்க் செயற்படவுள்ளார்.

இந்தச் சந்திப்பில் புலிகளின் தரப்பில் தமிழினி சுப்பிரமணியம், பிரமிளா சோமசுந்தரம், யாழினை பாலசிங்கம், சுதாமதி சண்முகராசா, காயா சோமசுந்தரம் ஆகியோரும் சிறிலங்கா அரசாங்கத் தரப்பில் டாக்டர் குமாரி ஜெயவர்த்தன, டாக்டர் தீபிகா உடகம, குமுதினி சாமுவேல் வைசுன் சக்காரியா, டாக்டர் பசிலா ரியாஸ்

(08ஆம் பக்கம் பார்க்க)

### மன்னார் கடற்பரப்பில்

## 42 தமிழக மீனவர்கள் நேற்றும் பிடிக்கப்பட்டனர்

தலைமன்னார் கடற்பகுதியில் நேற்றும் அத்துமீறி மீன்பிடித்த 42 தமிழக மீனவர்கள் மன்னார் மீனவர்களால் பிடிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று மாலை 4.00 மணியளவில் தலைமன்னார் பழைய பாலம் பகுதியில் இவர்கள் இழுவைப்படகுகளைப் பயன்படுத்தி அத்துமீறி மீன் பிடித்தொழிலில் ஈடுபட்டவேளை, மன்னார் மீனவர்களால் சுற்றிவளைத்து பிடிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் பேசாலை கடற்பரப்பில் பேசாலை மீனவர்களுக்கும் இந்திய மீனவர்களுக்குமிடையே இடம்பெற்ற மோதலில் 17இந்திய மீனவர்களும் 08 பேசாலை மீனவர்களும் காயமடைந்துள்ளதுடன் இதனைத் தொடர்ந்தும் 14 இந்திய படகுகளும் 64 மீனவர்களும் பேசாலை

(08ஆம் பக்கம் பார்க்க)




மறியலில் ஈடுபட்டிருக்கும் தொண்டர் ஆசிரியர்களில் ஒரு பகுதியினர்

### நிரந்தர நியமனம் கோரி

## தொண்டர் ஆசிரியர்களின் போராட்டத்தால் கிளி. அரச செயலகம், வலயப்பணிமனை செயலிழப்பு

தமக்கு நிரந்தர நியமனம் வழங்கக்கோரி வடமாகாண தொண்டர் ஆசிரியர் சங்கமும் பகுதிநேர ஆங்கில ஆசிரியர் ஒன்றியமும் இணைந்து நேற்று நடத்திய மறியல் போராட்டத்தால் கிளி. மாவட்ட அரச செயலகமும் கிளி. வலயக் கல்விப்பணிமனையும் செயலிழந்தன.

நேற்றுக் காலை 7.30 மணிக்கு இவ் இரு அரச அலுவலகங்கள் முன்பும் தொண்டர் ஆசிரியர்களும், பகுதிநேர ஆங்கில ஆசிரியர்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால் இவ் விரு அலுவலகங்களும் இயங்கவில்லை.

நூற்றுக்கணக்கானோர் இப் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

தமது கோரிக்கை நிறைவேற்றப்படும் வரைபோராட்டம் தொடர்ந்து நடைபெறும் என அவர்கள் அறிவித்துள்ளனர். தமது கோரிக்கைக்குச் செவிசாய்க்காத விடத்து போராட்டம் விரிவுபடுத்தப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (அ)

# சரியானதொரு தீர்வு கிடைக்காவிட்டால் மறியல் போராட்டம் விரிவடையும்

## தொண்டர் ஆசிரியர் சங்கச் செயலாளர்

எங்களுடைய பிரச்சினைக்குச் சரியானதொரு தீர்வு கிட்டும்வரை மறியல் போராட்டத்தை நடத்தவுள்ளோம். இந்த வகையில் நாம் அரச செயலகத்திலும், கிளி. வலயக் கல்விப் பணிமனையிலும் போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம். எங்கள் கோரிக்கை நிறைவேற்றப்படாத பட்சத்தில் அரச அரசசார்பற்ற நிறுவனங்கள் அனைத்தின் முன்பும் போராட்டம் நடத்துவோம் இவ்வாறு வடக்கு - கிழக்கு தொண்டர் ஆசிரியர் சங்கச் செயலாளர் பா.சதீஸ் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

01.01.2003 க்கு முன்னர் தொண்டர் ஆசிரியர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படும் என கல்வி அமைச்சிலிருந்தும் அரச உயர்மட்டத்தில் இருந்தும் அறிவிக்கப்பட்டது. ஆனால் நியமனங்கள் தொடர்பாக முழுமையாக முடிவெடுக்கப்பட்ட நிலையில் திறைசேரியில் வைத்து சந்திரிகா அரசால் நிறுத்தப்பட்டது. இவர்கள் எங்கள் நியமனப் பிரச்சினையை அரசியல் ரீதியான பிரச்சினையாகக் கருதுகின்றனரே தவிர, மனிதாபிமான அடிப்படையில் அணுகுவது போல இதுவரை தெரியவில்லை

ஆரம்பத்தில் எங்களுக்கு நிரந்தர நியமனம் வழங்கப்படும் என்று கூறி வடக்கு - கிழக்கில் 1000 தொண்டர் ஆசிரியர்களின் விபரங்களை மாகாண சபையும் கல்வி அமைச்சும் திரட்டியிருந்தும் இதுவரை காலமும் ஏமாற்றிக் கொண்டே இருக்கிறார்கள். தற்போது நிரந்தர நியமனம் கிடைக்காது போனால் தொண்டர் ஆசிரியர்களின் வாழ்க்கை எப்படி அமையும் என்று தீர்மானிக்க இயலாத ஒரு நிலையாக இருக்கிறது. எனவே எங்களுக்கு சரியான ஒரு முடிவு வரும் வரை தொடர்ச்சியான மறியல் போராட்டத்தை நடத்தவுள்ளோம் என்றார். (அ)

### - வன்னி செஞ்சிலுவை அலுவலகங்களுக்கு - கொழும்பு தலைமைச் செயலகத்திலிருந்து மூன்று பிரதிநிதிகள் வருகை

(அலுவலக செய்தியாளர்)

வன்னிப் பகுதியில் இயங்கிவரும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கிளைகளுக்கு கொழும்புத் தலைமைச் செயலகத்திலிருந்து நேற்று முன்தினம் மூன்று வைத்திய கலாநிதிகள் வருகை தந்துள்ளனர்.

இவர்கள் திங்களன்று கிளி. மாவட்டத்தில் இயங்கும் இலங்கை செஞ்சிலுவைச் சங்கக் கிளைகளுக்கும் நேற்று முல்லை மாவட்டத்தில் இயங்கும் செஞ்சிலுவைச் சங்கக் கிளைகளுக்கும் விஜயங்கள் மேற்கொண்டதுடன், அங்கு தேவையாகவுள்ள மருத்துவ வேலைத் திட்டங்களை இனங் கண்டு நீண்ட, குறுகியகால மருத்துவத் திட்டங்களை வழங்குவதற்கு முன்வந்துள்ளனர்.

வைத்திய கலாநிதிகள் ரவிச்சந்திரன், கே.டீ.சி.பெரேரா, காமினி ஜெயவர்த்தனா ஆகியோரே வருகை தந்துள்ளவர்களாவர். (சோ)

### வறிய மக்களுக்கு உதவி

இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் முல்லை மாவட்டக் கிளை முல்லைப்பட்டினத்தில் உள்ள 21 வறிய குடும்பங்களுக்கு உதவி வழங்கியுள்ளது. ஒரு குடும்பத்திற்கு ரூபா 2000 பெறுமதியான பொருட்களை நேற்று முன்தினம் காலை 10.30 மணிக்கு சிலாவத்தை டில்லி முன்பள்ளியில் வைத்து வழங்கியுள்ளது. (20)

# உயர்தர மாணவர்களுக்கு துரித மீட்டல் வகுப்பு

(அலுவலகச் செய்தியாளர்)

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கான மேலதிக துரித மீட்டல் வகுப்புக்கள் நடத்தப்படவுள்ளது.

2003 கல்வியாண்டுப் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்களுக்கு யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் துணையுடன் தமிழ் மீட்டல் வகுப்புக்கள் நாளை மு/வித்தியானந்தா கல்லூரியிலும், 7 ஆம் திகதி மு/புதுக்குடியிருப்பு மகா வித்தியாலயத்திலும் காலை 9 மணியளவில் நடைபெறும் என்றும் இதில் முல்லைத்தீவு கல்வி வலய மாணவர்களை தவறாது கலந்து கொள்ளச் செய்யுமாறும், முல்லைத்தீவு வலயக் கல்விப் பணிப்பாளர் ரீ.குருகுலராஜா தெரிவித்துள்ளார். (பா)

### துணுக்காய், கிளிநொச்சி வலய பதவியணியினருக்கான செயலமர்வு

பதவியணியினருக்கான விசேட செயலமர்வு எதிர்வரும் 9,10,11 ஆம் திகதிகளில் கிளிநொச்சி கல்வி வலய வள நிலையத்தில் துணுக்காய், கிளிநொச்சி வலயங்களைச் சேர்ந்த வலயக் கல்விப் பணிப்பாளர்கள், பிரதிக் கல்விப் பணிப்பாளர்கள், உதவிக் கல்விப் பணிப்பாளர்கள், ஆசிரிய ஆலோசகர்கள் ஆகியோர்களுக்கு நடைபெறவுள்ளது.

இதில் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் திரு.சுப்பிரமணியம் அவர்கள் கேட்டுக் கொள்கின்றார். செயலமர்வு 9 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணிக்கு ஆரம்பமாகும்.

### யுனிசெப் நிறுவன உப பணிமனை கிளிநொச்சியில் ஆரம்பம்

(அலுவலக செய்தியாளர்)

யுனிசெப் நிறுவனத்தின் உபபணிமனை கடந்த வெள்ளியன்று கிளிநொச்சியில் இயங்க ஆரம்பித்துள்ளது.

மேற்படி நிறுவனத்தின் பிரதான பணிமனை கிளி.யில் நிறுவப்படும் வரை இவ் உபபணிமனை முதன்மைச்சாலை இல 144 கிளிநொச்சியில் இயங்கிவரவுள்ளது.

கண்ணிவெடி விழிப்புணர்வு மற்றும் திட்டங்கள் தொடர்பான செயற்பாடுகளை இவ்வலுவலகத்திலிருந்து ம.பத்மசங்கர் மேற்கொண்டு வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

# கண்டியில் மாபெரும் கூட்டம் நடத்த ஐக்கிய தேசியக்கட்சி திட்டம்

## விசேட அறிக்கையை ரணில் விடுப்பார்

ஐக்கிய தேசியக்கட்சி கண்டியில் இம்மாதம் 12 ஆம் திகதி மாபெரும் கூட்டம் ஒன்றை நடத்தவுள்ளது.

சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இதற்குத் தலைமை தாங்கவுள்ளார். சமாதானப் பேச்சுக்கள் குறித்தும் அரசாங்கத்தின் பொருளாதாரச் சிந்தனை பற்றியும் இந்தப் பொதுக்கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விசேட அறிக்கை விடுப்பார் என கட்சியின் ஊடகப் பேச்சாளர் கூறியுள்ளார். அவர் நேற்று கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் இத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

### - சிறிலங்காப் படையினருக்கு - அமெரிக்க நிபுணர்கள் வழங்கிய பயிற்சிகள் பூர்த்தி

(கொழும்பு)

அம்பாந்தோட்டைப் பகுதியில் சிறிலங்காப் படையினருக்கு அமெரிக்க நிபுணர்கள் கடந்த பல வாரங்களாக வழங்கி வந்த பயிற்சி முடிந்துள்ளது என சிறிலங்காவின் இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் சரத் கருணாரட்ண கூறியுள்ளார்.

சிறிலங்காப் படையினர் 200 பேர் இதில் பயிற்சி பெற்றுள்ளனர். அமெரிக்காவின் இரண்டு அதிகாரிகளும் 60 படையினரும் பயிற்சி வழங்கியுள்ளனர்.

கடற்சமர் தொடர்பான பயிற்சிகளும் வழங்கப்பட்டன என இராணுவப் பேச்சாளர் மேலும் கூறியுள்ளார்.

### 536 பேருக்கு நியமனம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத்தைச் சேர்ந்த 536 பேருக்கு நேற்று முன்தினம் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டுள்ளன.

திருகோணமலையில் வைத்து இந் நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன. கடந்த காலங்களில் நடத்தப்பட்ட எழுதுநர் சேவை, மற்றும் தரவு பதிவு இயக்குநர், கணக்கு பதிவிநர், தொழில் நுட்ப அலுவலர்களுக்கான பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான நியமனக் கடிதங்களே வழங்கப்பட்டன. (23)

## சாவு அறிவித்தல்

### அமரர் திரு கந்தையா சிதம்பரப்பிள்ளை

அரசர்கேணி, பளையைப் பிறப்பிடமாகவும், கண்டாவளையை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. கந்தையா சிதம்பரப்பிள்ளை, அவர்களி (பூசகர், கோணன்குளம் பிள்ளையார் கோவில்) 03.03.2003, திங்கட்கிழமை காலை 11.00 மணியளவில் சாவடைந்துள்ளார். அன்னார் ... . அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற வள்ளிப்பிள்ளை, சிவசுந்தரமூர்த்தி, சண்முகலிங்கம் (ஜேர்மனி), கனகாம்பிகை (ஆசிரியை, கண்டாவளை மகாவித்தியாலயம்), ஆகியோரின் அன்புத் தந்தையும் காலஞ்சென்ற பூமணியின் அன்புச் சகோதரனும், கந்தையாவின் அன்பு மைத்துனரும், வைரமுத்து, திலகேஸ்வரி, சோதி, கருணாமூர்த்தி (ஈழநாதம் பணிமனை) ஆகியோரின் அன்பு மாமனாரும், மகேந்திரம், தங்கராணி, கிருபாகரன், கருணாகரன், குகாகரன், காயத்திரி, நிவேதா, விதுஷா,(ஜேர்மனி), ஜெசிந்தா, தட்சாகினி, சிவதர்சன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். 06.03.2003 (நாளை) வியாழக்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் ஈமக்கிரியைகள் நடைபெற்று கண்டாவளை கோணன்குளம், பொது மயானத்தில் சமாதி செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

*முகவரி:*
*கோணன்குளம்,*
*கண்டாவளை.*

*தகவல்,*
*த. கருணாமூர்த்தி (மருமகன்)*

(2268)


## தமிழீழப் போக்குவரவுக் கழகப் பயணியர் பேருந்துப் புதிய பணி

கிளிநொச்சி, கரடிப்போக்குநகர், உருத்திரபுரம், சிவநகர் வழித்தடத்தில் மேற்படி பேருந்துப்பணி 07-03-2003 ஆம் நாள் பின்வரும் நேர ஒழுங்கில் நடைபெறும் என்பதனை பொது மக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.



**சிவநகர் - கிளிநொச்சி**

**நேர ஒழுங்கு :**

| சிவநகர் | உருத்திரபுரம் | கிளிநொச்சி |
|---|---|---|
| காலை 07.15 | 07.30 | 08.00 |



**கிளிநொச்சி - சிவநகர்**

**நேர ஒழுங்கு :**

| கிளிநொச்சி | உருத்திரபுரம் | சிவநகர் |
|---|---|---|
| மாலை 04.30 | 05.00 | 05.15 |


**முகாமையாளர்,**
**பேருந்துப் பகுதி,**
**கிளிநொச்சி.**

(சி-7699)

# ஈராக்கின் தடை செய்யப்பட்ட பகுதியில் அமெரிக்கா, பிரிட்டன் விமானத் தாக்குதல்

(பாக்தாத்)


**ஈராக்கின் தென் பகுதியில் உள்ள பறப்புத்தடை வலயத்தின் மேலாக ரோந்து சென்ற அமெரிக்க, பிரிட்டன் விமானங்கள் அந்நாட்டின் ஐந்து நிலைகள் மீது தாக்குதலை நடத்தியுள்ளன.**




கண்ணாடி இழைநார்களின் மூலம் தகவல்களைப் பரிமாறும் நான்கு தொடர்பு மையங்களும் ஒரு கட்டுப்பாட்டு நிலையமும் நேற்று முன்தினமிரவு தகர்க்கப்பட்டதாக அமெரிக்க கட்டளைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

அமெரிக்காவும் பிரிட்டனும் இரண்டு லட்சத்துக்கும் மேற்பட்ட படைகளைக் குவித்திருக்கும் வேளையில் பறப்புத் தடைப்பிரதேசங்களில் இவ்வாறான தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.

தரையில் இருந்து தமது விமானங்கள் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்துக்குப் பதிலாகவே தாக்குதல் நடத்தியதாக அமெரிக்கா கூறுகிறது.



கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடும் அமெரிக்க பிரிட்டன் விமானங்கள்

## பிரிட்டிஷ்அமைச்சரவையில் போருக்கு ஆதரவு கிடையாது

### -பிளேயரின் நிலை சங்கடம்

ஈராக் மீதான போருக்கு பிரிட்டிஷ் அமைச்சரவை ஆட்சேபம் தெரிவித்து வருகின்றது. ஈராக் மீது போர் தொடுப்பதில் அமெரிக்க ஜனாதிபதியுடன் பூரண ஆதரவு தெரிவித்து வருகின்ற பிரிட்டிஷ் பிரதமர் ரொனி பிளேயருக்கு அமைச்சரவையில் இந்த நிலமை சிக்கலை ஏற்படுத்தி வருகின்றது.

ஈராக் மீதான இராணுவத் தாக்குதல் நடத்துவது குறித்து பிரிட்டிஷ் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலம் தொடர்பான விவாதத்தின் போதே அமைச்சரவையில் உள்ள பெரும்பாலான உறுப்பினர்கள் எதிர்ப்பைத் தெரிவித்து வருகின்றனர். இராணுவத் தாக்குதல் குறித்தான சட்ட மூலம் தொடர்பாக பிரிட்டிஷ் அமைச்சரவையில் தொடர்ந்தும் விவாதம் நடைபெற்று வருகின்றது.

### புதிய நெருக்கடி

துருக்கித் தளங்களை அமெரிக்க துருப்பினர் பயன்படுத்துவதற்கு துருக்கிப் பாராளுமன்றம் அனுமதி மறுத்துள்ளதை அடுத்து ஈராக் போர் தாமதமாகலாம் என அமெரிக்க அதிகாரிகளும் பாதுகாப்பு அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர்

துருக்கியின் நிலைப்பாட்டினால் நிலைமை குழப்பம் அடைந்துள்ளதாகக் குறிப்பிட்ட வெள்ளை மாளிகை, சனாதிபதி சதாம் ஹுசைனை பதவி விலக்கும் நிலைப்பாட்டில் இருந்து அமெரிக்க சனாதிபதி விலகிவிடவில்லை எனவும் கூறியுள்ளது.

## சனாதிபதி ஜாக் சிராக்கின் நல்லுறவுக்கான அழைப்பு

அல்ஜீரியாவும், பிரான்சும் கடந்த காலத் தவறுகளின் தழும்புகளை மறந்துவிட்டு நல்லுறவை ஏற்படுத்த வேண்டும் என்று பிரான்ஸ் சனாதிபதி ஜாக் சிராக் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவர் தனது மூன்று நாள் அல்ஜீரிய விஜயத்தின்போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.


1962ஆம் ஆண்டுக்குப் பின்னர் பிரான்ஸ் தலைவர் ஒருவர் அங்கு செல்வது இதுவே முதற் தடவையாகும்.

முஸ்லிம் நாடான அல்ஜீரியா 132 வருட காலம் பிரான்ஸின் ஆதிக்கத்தில் ஒரு காலனித்துவ நாடாக இருந்தது.

கடைசியில் 1954ஆம் ஆண்டு சுதந்திரம் கோரி அந்த நாடு ஆரம்பித்த போராட்டம் ஒரு யுத்தமாகவே வெடித்தது.



வளைகுடாப் பகுதியில் நிலைகொண்டுள்ள அமெரிக்க துருப்பினர் இரசாயன ஆயுத தாக்குதலிலிருந்து பாதுகாக்கும் உடையணிந்து காணப்படுகின்றனர்.



அமெரிக்க விமானப் படையின் ஆர்.சி.-135 ரக மேற்பாடி விமானம் கடந்த வியாழக்கிழமை ஜப்பானுக்கண்மையிலுள்ள சர்வதேச கடற்பரப்பில் நான்கு வடகொரிய யுத்த விமானங்களினால் வழிமறிக்கப்பட்டு 50 அடி இடைவெளியில் பின்தொடர்ந்துள்ளன என பென்டகன் கூறுகிறது. இதற்கு அமெரிக்கா கடும் விசனமும் வெளியிட்டுள்ளது.

## காஸாவில் மற்றொரு அகதிமுகாம் இஸ்ரேலியப் படையினரால் தாக்கு!

### -எட்டுப் பொதுமக்கள் பலியாகினர்



கர்ப்பிணிப் பெண்ணின் சடலம் எடுத்துவரப்பட்டவேளை சோகம் தாளாமல் கதறியழும் சகோதரி

இஸ்ரேலியத் துருப்புக்கள் நேற்று முன்தினம் காஸாவின் புறாச் பகுதியிலுள்ள அகதி முகாமை ஊடுருவி நடத்திய மற்றுமொரு தாக்குதலில் பலஸ்தீனர்கள் எட்டுப்பேர் பலியாகியுள்ளனர்.

கமாஸ் இயக்கத்தின் ஸ்தாபகரை இஸ்ரேலியர்கள் கைதுசெய்துள்ளதாகக் கூறப்படும் முகாமில் சண்டை இடம்பெற்றுள்ளது.

வீடுகள் தகர்க்கப்பட்டுள்ளன.

இச்சண்டைகளில் பலியானவர்களில் கர்ப்பிணித்தாய் ஒருவரும் அடங்கின்றார்.

உலகத்தின் பார்வை ஈராக்மீதான போர் பற்றிய விடயத்தில் குவிந்திருக்கும் சமயத்தில், காஸாவில் இராணுவ நடவடிக்கைகளைக் கட்டவிழ்த்துவிடும் இஸ்ரேலின் நோக்கத்தை இது தெளிவாகக் காட்டுகிறது என பலஸ்தீன அதிகார சபை குற்றம் சாட்டியுள்ளது.

## சதாம் நாட்டைவிட்டு வெளியேறினால் இராணுவ நடவடிக்கை இடம்பெறாது

### - ஐக்கிய அரபுக் குடியரசின் ஆலோசனை

ஈராக்மீதான இராணுவ நடவடிக்கை தவிர்க்கப்பட வேண்டுமானால் சனாதிபதி சதாம் ஹுசைன் நாட்டைவிட்டு வெளியேற வேண்டும் என ஐக்கிய அரபு எமிரேட் கேட்டுக் கொண்டுள்ளது.

டோகாவில் நடைபெற்ற ஆறு நாடுகள் வளைகுடா ஒத்துழைப்புக் கழகத்தின் கூட்டத்தில் உரை நிகழ்த்திய ஐக்கிய அரபு எமிரேட் வெளிவிவகார அமைச்சர் ரசீத் அப்துல்லா, ஈராக் மீதான இராணுவ நடவடிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டுமானால் சனாதிபதி சதாம்ஹுசைன் நாட்டை விட்டு வெளியேறவேண்டும் எனவும், அதனைத் தொடர்ந்து ஈராக்கிலும், ஈராக்கிற்கு வெளியேயும் வாழும் மக்களுக்கு பொதுமன்னிப்பு வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்தப் பிரேரணை கடந்த சனிக்கிழமை ஐக்கிய அரபு எமிரேட் சனாதிபதியினால் அரபுலீக் உச்சி மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. இந்தப் பிரேரணை சம்பந்தமான விளக்கம் எதனையும் தாங்கள் இதுவரை பெறவில்லை என ஆறு நாடுகளின் பிரதிநிதிகள் தெரிவித்துள்ளனர்.

இந்த நாடுகள் பகிரங்கமாக யுத்தநிறுத்தத்தை நிராகரித்துள்ள போதிலும் அதனைத் தவிர்ப்பதற்கான வழிவகைகளைக் காண்பதில் கருத்து வேறுபாடுகளை எதிர்நோக்கியுள்ளன.

## அரசின் அமைதி நடவடிக்கைக்கு எதிர்க்கட்சி முட்டுக்கட்டை போடுகிறது

### – இந்தியப்பாதுகாப்பு அமைச்சர் குற்றச்சாட்டு

(புதுடில்லி)

வடகிழக்குப் பகுதியில் அமைதியை நிலைநாட்ட மத்திய அரசு எடுத்துவரும் முயற்சிகளுக்கு காங்கிரஸ் கட்சி முட்டுக்கட்டை போடுகின்றது என்று மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் தலைநகர் அகர்தலாவில் நிருபர்களின் பேட்டியில் கூறியுள்ளார்.

வடக்குகிழக்குப் பகுதியில் அமைதியை நிலைநாட்டும் பொருட்டு மத்திய அரசு என்.எஸ்.சி. என். அமைப்பு உட்பட பல்வேறு தீவிரவாத அமைப்புக்களுடன் பேச்சுவார்த்தை நடத்த முயற்சி எடுத்து வருகின்றது என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

மேலும், வட.கிழக்குப் பகுதியில் அமைதியை நிலைநாட்ட அனைத்துத் தரப்பினரின் ஒத்துழைப்பு வேண்டும் என்று நாங்கள் விரும்புகின்றோம். ஆனால் காங்கிரஸ் கட்சி அமைதிப் பேச்சுவார்த்தைக்குத் தடையாக இருக்கின்றது.

திரிபுரா மாநிலத்தில் தீவிரவாத நடவடிக்கைகளால் மாநிலப் பொருளாதாரமே வீழ்ச்சியடைந்துவிட்டது என்றும் அமைச்சர் கூறியுள்ளார்.

# யாரைக் குறை கூறுகிறார் சந்திரிகா?

அண்மையில் மலேசியாவில் நடைபெற்ற கூட்டுச் சேரா நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்டுவிட்டு சனாதிபதி சந்திரிகா நாடு திரும்பியிருக்கிறார். நாடு திரும்பியதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சி மாநாடொன்று கண்டியில் நடைபெற்றிருக்கின்றது. இதனை விட ஜே.வி.பி.யுடனான கூட்டு ஏன்? என்பது குறித்து கட்சி உறுப்பினர்களுக்கு விளக்க மளிக்கும் கூட்டமொன்றையும் சனாதிபதி சந்திரிகா நடாத்தியிருக்கின்றார்.

அதேவேளை, இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் வைபவம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அவர், மலேசியாவும், சில தென்னாசிய நாடுகளும் பொருளாதார நிலையில் பெரும் முன்னேற்றம் கண்டிருப்பதாகவும், ஆனால், சிறிலங்காவின் பொருளாதாரப் பின்னடைவிற்கு 30 ஆண்டுகளாக நாட்டை ஆண்ட தலைவர்களின் குறைபாடே காரணம் எனவும் கூறியிருக்கின்றார்.

கடந்த 30 ஆண்டுகாலமாக சிறிலங்காவின் தலைவர்களாக இருந்தவர்கள் யார்? என்று


**வேலவன்**

பார்த்தால் கடைசி ஒரு வருடம் ரணில் அரசாங்கத்தின் தலைவராக இருந்தபோதும், நாட்டின் தலைவராக - நிறைவேற்று அதிகாரம் கொண்டவராக -சனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவே இருந்திருக்கின்றார். அதாவது, அரசாங்கத்தின் தலைவராக இருக்கும் ரணில் விக்கிரமசிங்கவில் பாரிய குறைபாடு எதுவும் இருப்பின் அதனை மக்களுக்குச் சுட்டிக் காட்டி, அவரைப் பதவி விலக்கிவிடக்கூடிய அதிகாரத்தை சந்திரிகா குமாரதுங்க இரண்டு மாதங்களுக்கு முன்னரே பெற்றுவிட்டார்.

அதற்கு முன்னர் 7 வருடங்கள் அவரே நாட்டின் தலைவர். அவரது கட்சியே ஆளும் கட்சி. எனவே அவர் கூறும் 30 வருடத்தில் சுமார் காற்பங்கு காலப்பகுதியில் நாட்டை ஆண்ட தலைவர் அவரே.

அதற்கு முன்னர் 17 வருட காலம் ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சி புரிந்துள்ளபோதிலும், அதற்கு முன்னர் மீதமுள்ள 5 வருடங்களும் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் தாயாரே நாட்டின் தலை வராக இருந்திருக்கின்றார். எனவே அவர் கூறும் 30 ஆண்டுகளில் 13 ஆண்டு கள் அதாவது, 43 சதவீதமான பகுதி அவரது குடும் பத்தின் ஆட்சிக் கால மாகவே இருந்திருக்கின்றது. எனவே நாட்டின் பின்னடை வுக்கு பெரும் பங்கை அரவது குடும்பத்தினரும் அதில் முக்கிய பங்கை அவரும் ஆற்றியிருக்கின்றனர்.

அதில், இன்னொரு விடயத்தையும் இங்கு கவனிக்க வேண்டும். அதாவது, அவரது ஏழு வருட ஆட்சிக் காலத்தைப் போல சிறிலங்கா ஒருபோதும் பாரிய நிதி நெருக்கடியைச் சந்தித்ததில்லை என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட விடயமாகும். 2400 கோடி ரூபாவிலிருந்த பாதுகாப்புச் செலவினத்தை அவர் பதவி ஏற்ற ஆண்டிலேயே இரண்டு மடங்காக்கிய பெருமை அவருக்கு உண்டு. பின்னர் அவரது முதலாவது பதவிக் காலத்தின் இறுதிப் பகுதியில் இது நான்கு மடங்கிற்கும் அதிகமானது. அதேவேளை, இரண்டாவது முறை சனாதிபதியாகப் பதவியேற்று அவரது கட்சி ஆளும் கட்சியாகவும், இருந்த ஓராண்டு காலப் பகுதியிலும் அதற்குச் சற்று முந்திய மாதங்களிலும் அவர் ஆயுதக் கொள்வனவுக்கு எவ்வளவு நிதியைக் கொட்டினார், எவ்வளவைக் கடனாகப் பெற்றார் என்பது திறைசேரிக்குக் கூடத் தெரியாது. கடன்காரர் கழுத்தை நெரிக்கும் போதே தெரிய வருவதாகக் கூறப்படுகின்றது.



அதேவேளை, எப்பொழுதும் இல்லாதவாறு பொருளாதார வளர்ச்சி மறைப் பெறுமானத்திற்குச் சென்றது அவரது ஆட்சிக் காலத்தில்தான்.

1977இல் சிறிலங்காவின் ஆட்சியை ஜே.ஆர். ஜெயவர்த்தன பொறுப்பேற்றபோது சிறிலங்காவை சிங்கப்பூராக மாற்றிக் காட்டப் போவதாகக் கூறியிருந்தார். அதற்கு முன்னர் இறுக்கமாகக் கடைப்பிடிக்கப்பட்ட தேசிய மயமாக்கற் கொள்கையை முற்றாகக் கைவிட்டு, திறந்த பொருளாதாரக் கொள்கை மூலம் அதனைச் சாதிப்பதே அவரது நோக்கமாக இருந்தன.

திறந்த பொருளாதாரக் கொள்கையானது நீண்ட கால நோக்கில் தகுந்த பலனைத் தந்திருக்குமா? என்ற கேள்விக்கு சரியான விடை கிடைக்கவில்லை. அவ்வாறு கிடைப்பதற்கு மறுபுறத்தில் தமிழ் மக்களின் மீது அவர் புரிந்த ஒடுக்கு முறைகளும், தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை அழித்து விடத் தமிழ் மக்கள் மீது அவர் கட்டவிழ்த்துவிட்ட அரச பயங்கரவாதத்தின் விளைவுகளும் காரணமாக இருந்தன.

உச்சக் கட்டமாக 1983இல் தமிழ் மக்கள் மீது இலங்கை முழுவதும் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவெறித்தாக்குதலின் தாக்கமானது, இலங்கை குறித்த வெளிநாடுகளில் பெரும் பாதகமான கருத்தை உருவாக்கியது. இதனைச் சீர் செய்வதற்கு அவருக்கு நீண்ட காலம் பிடித்தது. இதன் காரணமாக சிறிலங்காவைச் சிங்கப்பூராக்கும் அவரது கனவும் சிதைந்தது.

எவ்வாறாயினும் ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக்காலத்தில் சுமார் 12 ஆண்டுகள் பாரிய யுத்தத்தைச் சந்தித்தமையானது, பெரும் பொருளாதாரப் பின்னடைவுக்கு வழிவகுத்தது.

பின்னர் இப்பின்னடைவுகளில் இருந்து மீட்சி பெற சமாதானப் பேச்சுக்களின் மூலமே சாத்தியமாகும் என வெண்புறா வேடமணிந்து பதவியேற்றவர் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.

பிரான்சில் பட்டம் பெற்ற முற்போக்கான சிந்தனைகொண்ட ஓர் அரசியல் வாதியாக அடையாளம் காணப்பட்டவர் சந்திரிகா குமாரதுங்க. அவரைச்சூழ இருந்தவர்கள் அவர் பதவி நாற்காலியைக் கைப்பற்ற ஏணியாக இருந்தவர்கள் கூட புத்திஜீவிகளாகவே இருந்தனர். ஆனால் அவர்களும் இறுதியில் தேர்ந்தெடுத்ததும் யுத்தத்தையே. அதிலும் மற்றெல்லா வற்றையும் கைவிட்டு முழுவளங்களையும் போருக்கே திருப்பி கோர யுத்தத்தை அவர் நடத்தினார். இது சனாதிபதி சந்திரிகாவுக்கும் சிறிலங்காவுக்கும் பெரும் பின்னடைவையே ஏற்படுத்தியது. எனவே இந்தவகையில் பார்க்கும்போது சிறிலங்காவின் பொருளாதாரப் பின்னடைவுக்கு முக்கிய காரணமாக அவரே அமைகிறார். ஆனால் அதனை ஒப்புக் கொள்ளும் மனப்பாங்கு அவருக்கு இல்லை. அதனால் ஏனைய தலைவர்கள் மீது சுமத்திவிடப்பார்க்கிறார்.

இதேவேளை மலேசியாவைப்பார்த்து அதனை சிறிலங்காவுடன் ஒப்பிட்டு ஆதங்கத்துடன் இக்கருத்துக்களைக் கூறிய அவர், தொடர்ந்தும் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் சிறிலங்காவினை உய்விக்குமா? என்று கேட்டால் அதற்கான அறிகுறி எதுவும் தெரியவில்லை.

20 ஆண்டுகளுக்கு மேலாக சிறிலங்கா ஆட்சியாளர்கள் தமிழ்மக்கள் மீது தொடுத்த போரே சிறிலங்காவின் இன்றைய பின்னடைவுகளுக்குக் காரணம் என்பது வெளிப்படையான ஒன்றாகும். ஆனால் இவ்விடயத்தில் போரையே தீவிரமான கொள்கையாகத் தீர்க்கமான முடிவாகக் கொண்டுள்ள ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு அவர் முயல்கிறார். கடந்தவாரம் முழுவதும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியினர் அடுத்த தீவிர முயற்சி இறுதிக் கட்டத்தைஅடைவதற்கான அறிகுறிகள் தென்படுகின்றன.

எதிர்வரும் 10ஆம் திகதி ஏற்பாடு செய்யப்பட்டுள்ள அரசாங்கத்துக்கு எதிரான பேரணியைக் குறிக்கோளாக வைத்து புரிந்துணர்வு உடன்பாட்டுக்கு வந்துவிட விரைவான பேச்சுவார்த்தைகள் ஒருபுறம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. மறுபுறம் சிறிலங்கா சுதந்திரக்கட்சியினருக்கும் விளக்கமளிக்கப்படுகிறது.

முரண்பாடான விடயங்களில் இணக்கம் காணுவதற்கான தீவிர முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. சனாதிபதிமுறை மாற்றம், தேர்தல் முறை மாற்றம், அரசியலமைப்பு மாற்றம் என்பன போன்ற விடயங்களும், இனப் பிரச்சினை தொடர்பான விடயங்களும் தற்போதைய பேச்சுக்களில் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளதாகத் தகவல்கள் கூறுகின்றன.

இதேவேளை தனியார் மயமாக்கல் கொள்கை விடயத்தில் இரு தரப்புக்குமிடையே முரண்பாடுகள் இருப்பதாகக் கூறப்படுகிறது.இவ்விடயத்தில் ஜே.வி. பி விட்டுக் கொடுப்புக்கள் செய் தாலும் இனப் பிரச்சினைத் தீர்வு விவகாரத்தில் அது விடாப் பிடியாக நிற்பதாகவே தெரிகிறது. அதேவேளை சமாதானப் பேச்சுக்கள் தொடரும் நிலையில் ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தை கவிழ்ப்பது என்பது சிரம சாத்தியமான விடயம் என்பதை இருதரப்புக் களுமே புரிந்து கொண்டுள்ளன. இந்நிலையில் சமாதான நடவடிக்கைகளுக்கு எதிரான - அவற்றைக் குழப்பும் முயற்சிகளை அவை நாடவே செய்யும். அதற்கு சனாதிபதியின் அதிகாரங்களைப் பயன்படுத்த வேண்டும். என்பதே ஜே.வி.பி யின் நீண்ட கால வற்புறுத்தலாகும்.

எனவே சுதந்திரக் கட்சிக்கும் ஜே.வி.பி.க்கும் இடையே புரிந்துணர்வு உடன்படிக்கையொன்று ஏற்படுமாயின் அது சமாதான நடவடிக்கைகளுக்கு எதிராகவே அமையக் கூடியதாகும். இதனைக் கருத்திற் கொண்டு பார்த்தால் சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவோ அல்லது வேறு ஒரு சிங்களத் தலைவரோ இன்னும் பத்து ஆண்டு களின் பின்பும் முன்னைய தலைவர்களைக் குறை கூறும் நிலையே நீடிக்கும் என எதிர்பார்க்கலாம். □

---

## அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் கிளிநொச்சியில் கிளைகளை அமைக்க முடிவு

(யாழ்ப்பாணம்)

வடக்கு - கிழக்கு மாகாணத்தில் உள்ள முக்கிய அரச திணைக் களங்கள் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களின் தலைமையகங் களின் கிளைகள், கிளிநொச்சி மாவட்டத்தைத் தளமாகக் கொண்டு இயங்கவுள்ளன.

திருகோணமலையில் உள்ள ஒவ்வொரு முக்கியமான அலுவலகங்களும் அதன் ஒரு அங்கமான செயலகத்தை கிளிநொச்சி மாவட்டத்தில் நிறுவி, அதன் திணைக் களத் தலைவர்கள் சார்ந்த ஏனைய உப அதிகாரிகள் நியமிக் கப்பட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படவுள்ளன.

வட-கிழக்கு மாகாணத்தில் உள்ள நிர்வாக மற்றும் அபி விருத்தித் திட்டங்களை முன் னெடுத்துச் செல்வதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள் ளது. (23)

## கோர வாகனவிபத்தில் சாரதி உயிரிழப்பு!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் நேற்று முன்தினம் இடம் பெற்ற வாகன விபத்தொன்றில் ஒருவர் பலியாகி யுள்ளார்.

பொத்துவிலில் இருந்து வாழைச்சேனை நோக்கிச் சென்று கொண்டிருந்த லொறி ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதியதில் இவ் விபத்து ஏற்பட்டது.

மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்த மட்டக்களப்பு ஊறணியைச் சேர்ந்த தம்பிராசா சிற்றம்பலம் என்பவரே பலியானவராவார்.

## 150 க்கும் அதிகமான பாடசாலைகளுக்கு மூடுவிழா

(கொழும்பு)

நாடு பூராவும் 150க்கும் மேற் பட்ட அரசாங்கப் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளதாக கல்வித் திணைக்கள அறிக்கை மூலம் தெரிய வந்துள்ளது.

1998 ஆம் ஆண்டு தொடக்கம் 2002 ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியிலேயே இந்தப் பாடசாலைகள் மூடப்பட்டுள் ளன.

போர்ச் சூழல், மாணவர்கள் வீழ்ச்சி, ஆசிரியர்கள் பற்றாக் குறை என்பனவே இந்தப் பாடசாலைகள் மூடுவதற்கான காரணம் என்றும் தெரிவிக்கப்பட் டுள்ளது.

## பதவிக் காலம் நீடிப்பு

யாழ் பல்கலைக் கழகத்தின் துணை வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளையின் பதவிக் காலம் மேலும் நீடிக்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக் கழகத்துக்கான புதிய துணைவேந்தர் நியமிக்கப் படுவதில் தாமதங்கள் ஏற்பட்டுள்ளமையே இவரது பதவிக் காலம் நீடிப்புக்கான காரண மாகும்.

# வன்னியில் மையம் கொள்ளும் அரசியல் - இராஜதந்திர நகர்வுகள்!

**வி**டுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகரும், தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் அவர்களின் வன்னி வருகையும் - வெளிநாட்டு பிரதிநிதிகள் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவர்களின் வன்னி வருகையும் - எதிர்பார்க்கப்படும் தமிழீழ தேசியத்தலைவருடனான சந்திப்புகளும் அடுத்த இருவாரங்களுக்கு அரசியல் - இராஜதந்திர நகர்வுகளை வன்னியில் மையம்கொள்ள வைக்கும் என்றே எதிர்பார்க்கப்படுகிறது.

அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் வன்னி திரும்பியதுமே தேசியத்தலைவர் வே. பிரபாகரன் அவர்களுடன் தீவிரமான ஆலோசனைகளை மேற்கொண்டு வருகின்றார். யுத்தநிறுத்த உடன்பாடு, தற்போதைய அரசியல் களநிலவரம், அடுத்த கட்ட அரசியல் நகர்வுகள் என்பன இவ் ஆலோசனைகளில் முக்கிய விடயங்களாக உள்ளதாகத் தகவல் அறிந்த தரப்பினர் தெரிவிக்கின்றனர்.

அரசியல்ஆலோசகரின் வருகையின் பின்னர் தீவிரம் பெற்றுள்ள அரசியல்- இராஜதந்திர செயற்பாடுகளை அவதானிக்கும்போது கடந்த ஆண்டில் புரிந்துணர்வு உடன்பாடு கைச்சாத்தாகியதன் பின்னான ஓரிரு மாதங்களில் நிலவியது போன்றதொரு புறச்சூழ்நிலையை ஒத்ததொரு சூழ்நிலையே காணப்படுவதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

கடந்த ஆண்டு யுத்த நிறுத்தம் கைச்சாத்தாகியதைத் தொடர்ந்து வன்னியில் அரசியல் - இராஜதந்திர நடவடிக்கை முனைப்புப்பெற்றன. தமிழீழத் தேசியத் தலைவர் கூடிய பத்திரிகையாளர் மாநாட்டில் இருந்து தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவருடனான சந்திப்பு, தமிழர் கூட்டமைப்பினருடனான சந்திப்பு, மலையகத் தலைவர்களுடனான சந்திப்பு, முஸ்லிம் காங்கிரஸ் உடனான சந்திப்பு எனப் பல முக்கியத்துவம் மிக்க அரசியல் - இராஜதந்திரப் பணியில் விடுதலைப் புலிகள் ஈடுபட்டனர்.

இதனையொத்ததொரு நிலையே இவ்வாரத்திலும் அடுத்த வாரத்திலும் இடம் பெறுவதற்கான சூழ்நிலை அதிகரித்துள்ளது. எடுத்துக்காட்டாக, ஓய்வு பெற்றுச் செல்லும் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன்ட்புருவ் ஹொவ்டேயும், புதிய தலைவராகப் பதவி ஏற்கவுள்ள மேஜர் ஜெனரல் ரெக்கி டெவில்சனும் இன்று கிளிநொச்சிக்கு வருகைதந்து புலிகளுடன் சந்திப்புக்களை நடத்தவுள்ளனர். இச்சந்திப்பில் தமிழீழத் தேசியத் தலைவர் வே. பிரபாகரன் அவர்கள் கலந்து கொள்வார் என உத்தியோகபூர்வ மற்ற ரீதியில் தகவல்கள் வெளி யாகியுள்ளன.

இதேவேளை, எதிர்வரும் 13 ஆம் திகதி நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சனும், பிரதி வெளிவிவகார அமைச்சர் ஹெல்கேசனும் கிளிநொச்சி வரவுள்ளதாகவும், அவர்கள் விடுதலைப் புலிகளின் உயர் மட்டத்துடன் பேச்சுக்களை நடத்தவுள்ளதாகவும் நோர்வே தரப்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் சமாதான முயற்சிகளைக் கண்காணித்து வரும் ஜப்பானின் விசேட தூதுவர் யசுசி அகாஷியும் இரு வாரகாலத்திற்குள் வன்னிக்கு வருகை தரவுள்ளதாகவும், விடுதலைப் புலிகளின் உயர்மட்டத்துடன் பேச்சுக்களை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டிருப்பதாகவும் ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. இந்த வகையில் பார்க்கையில் சர்வதேச ரீதியான இராஜதந்திர செயற்பாடுகள் அடுத்த இருவாரங்களில் வன்னியில் இடம் பெறுவதற்கான சூழ்நிலை உரு வாகியுள்ளது என்றே கொள்ளமுடியும்.

மேலும், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவதற்கென முஸ்லிம் தலைவர்கள் சிலர் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் அவர்கள் நோர்வே தூதரகத்துடன் இது பற்றித் தொடர்பு கொண்டுள்ளதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

இவற்றைத் தவிர, தமிழ்க் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்களை கிளிநொச்சிக்கு வருமாறு விடுதலைப் புலிகள் அழைப்பு விடுத்துள்ளதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. இந்த வகையில் வன்னியில் இவ்வாரத்திலும் அடுத்த வாரத்திலுமாக அரசியல் - இராஜதந்திர நடவடிக்கைகள் முனைப்புப் பெற்றுள்ளன.

ஆகையினால், கடந்த ஆண்டில் யுத்த நிறுத்தம் கைச்சாத்தானதை அடுத்து எழுந்தது போன்றதொரு புறச் சூழ்நிலை தற்பொழுது நிலவுகின்றதெனக் கூறின் தவறாகமாட்டாது. ஆனால், அன்றைய அரசியல் சூழ்நிலைக்கும், இன்றைய அரசியல் சூழ்நிலைக்கும் இடையில் வேறுபாடு காணப்படுவதோடு, பிரச்சினைகளின் வடிவங்களிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில், யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டு அமைதிச் சூழ்நிலை ஒன்று ஆரம்பமாகியிருந்தது. ஆகையினால், செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்தம், யுத்த நிறுத்த உடன்பாட்டு விதிகளின் அமுலாக்கம் என்பன முக்கிய விடயங்களாக இருந்தன.

அடுத்ததாக விடுதலைப் புலிகள் குறித்து உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமாக இருந்த சந்தேகங்கள், ஐயப்பாடுகள் என்பனவற்றை விடுதலைப் புலிகள் தீர்த்து வைக்க வேண்டியதொரு நிலையும், சமாதானத்திற்குத் தாங்கள் வழங்கிவரும் ஒத்துழைப்பை உறுதி செய்ய வேண்டிய கட்டாயத்திலும் இருந்தனர்.

இதன் வெளிப்பாடாகவே தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அவர்கள் பத்திரிகையாளர் மாநாடு ஒன்றையும் முஸ்லிம் மற்றும் மலையகத் தலைவர்களையும் சந்தித்துப் பேச வேண்டியும், முஸ்லிம் தலைவர்களுடன் ஓர் இணக்கப்பாட்டிற்கு வருவது குறித்தும் பேசவேண்டியதாகியது.

ஆனால், தற்போதைய அரசியல் சூழ்நிலையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அதாவது விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்கும் இடையில் ஐந்து சுற்றுப் பேச்சுவார்த்தைகள் வெளிநாடுகளில் நடை பெற்றுள்ளன. இதில் பல்வேறு தீர்மானங்களும் எடுக்கப்பட்டுள்ளன.

இதற்கிடையில் பலநாடுகளின் பிரதிநிதிகள் கிளிநொச்சிக்கு விஜயம் செய்து விடுதலைப் புலிகள் அமைப்புடன் பேச்சுக்களை நடாத்தியுள்ளதுடன், சமாதான முயற்சிகளுக்குத் தமது ஆதரவைத் தெரிவித்ததுடன், விடுதலைப் புலிகள் மீது நம்பிக்கையையும் வெளிப்படுத்தி யுள்ளனர்.

மேலும், விடுதலைப் புலிகள் பேச்சுவார்த்தை என்ற ரீதியிலும், தாய்லாந்து, நோர்வே, ஜேர்மனி ஆகிய நாடுகளுக்குச் சென்று திரும்பியதோடு, ஜப்பானுக்குப் பயணத்தை மேற்கொள்வதற்கான முன் ஏற்பாடுகளிலும் ஈடுபட்டுள்ளனர்.

இவ் ஜப்பான் பேச்சுவார்த்தைகள் சமாதான முயற்சிகளில் முக்கியத்துவம் மிக்கதொன்றாகப் பரவலாக எதிர்பார்க்கப்படுகின்றது. சமாதான முயற்சிகளில் ஜப்பான் காட்டும் ஆர்வமும், இலங்கைக்கு நிதி உதவி வழங்கும் முக்கியமான நாடு ஜப்பான் என்ற ரீதியிலும், இப்பேச்சுவார்த்தையின் போது முன்னேற்றகரமான தீர்மானங்கள் எட்டப்படவேண்டுமென ஜப்பான் எதிர்பார்க்கின்றது.



இத்தகைய போக்கு சர்வதேச மட்டத்தில் தமிழீழப் போராட்டம் குறித்ததொரு தோற்றப்பாட்டை உருவாக்கியதோடு விடுதலைப் புலிகளுக்கும் அந்தஸ்தைத் தேடிக் கொடுப்பதாகவும் மாறியுள்ளது.

இதேவேளை, புரிந்துணர்வு உடன்பாடு உள்நாட்டிலும் குறிப்பிடத்தக்க மாற்றத்தை ஏற்படுத்தியிருந்தது. இதில் யுத்தம் நிறுத்தப்பட்டமையும், ஏ-9 வீதி திறக்கப்பட்டமையும் முக்கியத்துவமானவையாகும். அதாவது, யுத்த நிறுத்த மீறல்கள் இடையிடையே இடம்பெற்றதெனினும், இது ஒரு பெரும் மோதலாக வெடிக்காது பாதுகாக்கப்பட்டமையும், ஏ-9 பாதை திறப்பால் ஏற்பட்டுள்ள மாற்றங்களும் சுட்டிக்காட்டத்தக்கவையாகும்.

ஆயினும், யுத்த நிறுத்த உடன்பாட்டில் இன்னமும் நிறைவேற்றப்படாத அம்சங்களும் மக்களின் இயல்பு வாழ்க்கையை மீளக்கொணர்தல் தொடர்பானதுமான விடயத்தில் சிறிலங்கா ஆயுதப் படையினரின் நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவில்லை.

அதாவது, புரிந்துணர்வு உடன்பாட்டில் இன்னமும் நிறைவு செய்யப்படாத பகுதிகள் பல உள்ளன. குறிப்பாக மக்கள் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்புதல் என்ற விடயத்தில் புரிந்துணர்வு உடன்பாட்டிற்கு ஏற்ப இராணுவம் செயற்படுவதாக இல்லை. குறிப்பாக உயர் பாதுகாப்பு வலயத்தில் மக்கள் குடியேறுவதற்கு இராணுவம் போட்டுவரும் முட்டுக்கட்டையைச் சுட்டிக்காட்டமுடியும்.

இந்த வகையில், புரிந்துணர்வு உடன்பாட்டின் நிறைவேற்றப்படாத அம்சங்கள் பல இருக்கையில், இக்காலப் பகுதியில் சிறிலங்கா ஆயுதப்படையினர் மேற்கொண்ட யுத்த நிறுத்த மீறல்களும் பல உள்ளன.

அவற்றில் சில யுத்த நிறுத்த மீறல்கள் பாரதூரமானவையாகவும் இருந்துள்ளன. குறிப்பாக நெடுந்தீவுக் கடற்பரப்புச் சம்பவம், மானிப்பாயில் பெண் போராளிகள் மீதான தாக்குதல் சம்பவங்கள் என்பன சமாதான முயற்சிகளில் பாதிப்புக்களை விளைவிக்கும் அளவிற்கு அமைந்துள்ளவையாகவும் இருந்தன.

இவை ஒரு புறம் இருக்க யுத்த நிறுத்த உடன்பாடு கைச்சாத்தாகி ஒரு வருடம் கடந்து விட்டநிலையிலும் இதனால் தமிழ் மக்கள் பொருளாதார ரீதியில் பயன் எதனையும் அவர்கள் பெற்றுக் கொண்டதாக இல்லை. அவர்களின் வாழ்க்கை நிலையில் எந்தவித மாற்றமும் ஏற்பட்டதாக இல்லை. இவை தமிழ் மக்கள் மத்தியில் சமாதானம் குறித்த அவநம்பிக்கைகளைத் தோற்றுவிப்பதாக மாறிவருகின்றது.

புனர்வாழ்வு, புனரமைப்பு குறித்த அறிக்கைகள், சந்திப்புக்கள், திட்ட வரைபுகள், கலந்துரையாடல்கள் என நாளாந்தம் தகவல்கள் வெளியாகிக் கொண்டு இருக்கின்ற போதும் மக்கள் நன்மை பெறவில்லை. மக்கள் தொடர்ந்தும் யுத்தகாலத்தில் சந்திக்க நேர்ந்த வறுமைக்கும், நெருக்கடிகளுக்கும் முகம் கொடுத்துக்கொண்டே வருகின்றனர்.

தமிழ் மக்களின் பிரச்சினைகள் இவ்வாறானதாக இருக்கையில் முஸ்லிம் காங்கிரஸ் போன்ற கட்சிகள் சமாதானப் பேச்சுவார்த்தையில் முஸ்லிம் பிரதிநிதிகள் மூன்றாம் தரப்பாக பங்குபற்ற அனுமதிக்கவேண்டும் என்று முன்வைத்து வரும் கோரிக்கையானது பிரச்சினையை மேலும் அதிகரிப்பதாகவும், தீவிரப்படுத்தும் ஒன்றாகவும் மாறியுள்ளது.

அதுமட்டுமல்ல ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐ.தே.முன்னணி அரசாங்கம் இனப்பிரச்சினைத்தீர்வில் காட்டும் அக்கறையானது குறைவடைந்துள்ளது என்பது பொதுப்படையானதொரு அபிப்பிராயமாக உருவாகிவருகின்றது. அதாவது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சமாதான முயற்சிகளில் காட்டும் அரசின் தீவிரம் குறைவடைந்துள்ளது என்பதாகும். இதற்குப் பல காரணிகள் இருப்பினும் சமாதானத்தின் மீதான அரசின் தீவிரம் குறைதல் என்பது அரசியற் சூழ்நிலையில் ஏற்பட்டுள்ள மாற்றமாகவே கொள்ளத்தக்கதாகும்.

இவ்வாறாக அரசியற் களநிலையில் கடந்த ஒரு வருடத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டிருக்கையில், வன்னியில் அரசியல் இராஜதந்திர செயற்பாடுகள் முனைப்புப் பெற்றுள்ளமை முக்கியத்துவம் பெற்றுள்ளது. இந்நிலையில், தற்போதைய அரசியல் சூழ்நிலைக்கும், கள யதார்த்தத்திற்கும் ஏற்ப விடுதலைப் புலிகள் கைக்கொள்ளப்போகும் அரசியல் இராஜதந்திர நகர்வுகள் எதிர்பார்க்கப்படுபவையாகவுள்ளன. ஏனெனில் இலங்கையின் அரசியலில் முக்கியத்துவம் மிக்க திருப்பங்கள், மாற்றங்களுக்கு இவை காரணமாகக்கூடும்.

- ஜெயராஜ் -

### -கைதடி- நாவற்குழிப் பகுதியில் -

# படையினரால் கைதானோர் நிலையறிய காணாமல் போனோர் சங்கம் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

**கைதடி- நாவற்குழிப் பகுதியில் 1996 ஆம் ஆண்டு இடம் பெற்ற சுற்றிவளைப்பில் கைது செய்யப்பட்டு, பின்னர் காணாமல் போன 24 பேர் தொடர்பாக, யாழ். குடாநாட்டில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமல் போனோர் சங்கம் வழக்குத் தாக்கல் செய்யத் தீர்மானித்துள்ளது.**

எதிர்வரும் 20 ஆம் திகதிக்கு முன்னர் யாழ். நீதிமன்றத்தில் இந்த வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

இந்த வழக்கின் எதிர் மனுதாரர்களாக யாழ். மாவட்ட முன்னாள் அரசாங்க அதிபர் கே.சண்முகநாதன் தற்போதைய அரச அதிபர் எஸ். பத்மநாதன் முன்னாள் குடாநாட்டு சிறிலங்கா இராணுவ கட்டளைத் தளபதி மேஜர் ஜனகபெரேரா, கைதடி பகுதிக்குப் பொறுப்பாகவிருந்த கப்டன் துமிந்தகெப்ரி என, துணைப்பொறுப்பாளர் கப்டன் சுனில், மேஜர் வீரக்கொடி ஆகியோர் குறிப்பிடப்படவுள்ளனர்.

கைதடி- நாவற்குழி பகுதியில் 1996 ஆம் ஆண்டு யூலை மாதம் 19ஆம் திகதி நடைபெற்ற சுற்றிவளைப்பில் நூற்றுக்கும் மேற்பட்டோர் கைது செய்யப்படடிருந்தனர்.

எனினும், இதில் 24பேர் இது வரை விடுதலை செய்யப்படவில்லை. இவர்கள் பற்றிய விபரங்களைக் கோரியே இந்த வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

## தற்கொலை

மன்னார் பேசாலையில் குடும்பப் பெண்ணொருவர் தன்னைத் தானே தீமூட்டித் தற்கொலை செய்துள்ளார்.

மூன்று பிள்ளைகளின் தாயான இவர் குடும்பத்தகராறு காரணமாக மண்ணெய் ஊற்றி தன்னைத் தானே தீமூட்டித் தற்கொலை செய்துள்ளார். இச்சம்பவம் கடந்த ஞாயிறுஅன்று இடம்பெற்றது.

(மி)

## ஏப்ரல் நடுப்பகுதிக்குள் பரீட்சை முடிவு வெளியாகும்

(கொழும்பு)

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற க.பொ.த. (சா.த) பரீட்சையின் முடிவுகள் எதிர்வரும், சிங்கள தமிழ் புதுவருடப் பண்டிகைக்கு முன்னர்வெளியிடப்படும் என பரீட்சையாணையாளர் டபிள்யூ ஏ-எம்- விஜயசிறி தெரிவித்துள்ளார்.

கடந்த டிசம்பர் மாதம் 02 ஆம் திகதி முதல் 13ஆம் திகதிவரை நாடு முழுவதும் நடைபெற்ற இப் பரீட்சைக்கு 5,13,876 பரீட்சார்த்திகள் தோற்றியிருந்தனர்.

இவர்களில் 3,83,015பேர் பாடசாலைப் பரீட்சார்த்திகள் ஏனையோர் தனிப்பட்ட பரீட்சார்த்திகள்.ஆவர்.

## தபால் சேவை சீரில்லை; மட்டு. மக்கள் அதிருப்தி!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்திற்கான போக்குவரத்து 24 மணிநேரமும் இடம்பெறுகின்ற வேளையிலும் தபால் சேவை பாதிக்கப்பட்டிருப்பதாக மக்களால் விசனம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தபால் சேவைகள் சரியாக இடம்பெறாததால் அரச திணைக்களங்கள் மற்றும் வங்கிகள் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றன.

## தென்னைகளைத் தாக்கும் 'மைற்ஸ்' நோயை உயிரியல் முறையில் தடுக்க நடவடிக்கை

தென்னைகளுக்கு ஊறுவிளைவிக்கும் "மைற்ஸ்" நோயைக் கட்டுப்படுத்துவதற்கு உயிரியல் முறைகளை பயன்படுத்துவது சம்பந்தமாக நடத்தப்பட்ட சோதனைகள் சிறந்த பெறுபேறுகளைத்தந்துள்ளன என தென்னை ஆராய்ச்சி நிறுவகம் கூறுகிறது.

இந்த நோய்க்குக் காரணமான கிருமியை அழிக்கும் ஒரு உயிரினத்தை நிறுவகம் கண்டுபிடித்துள்ளது.

இந்த உயிரினத்தைப் பெருமளவு இனப் பெருக்கம் செய்து தென்னந் தோட்டங்களில் விடுவது சம்பந்தமாக தற்போது சோதனை நடத்தப் படுகின்றது.

## டைனமற் பயன்படுத்தி மீன்பிடித்தோர் கைது

(மன்னார்)

மன்னாரில் சட்ட விரோதமான முறையில் மீன்பிடியில் ஈடுபடும் மீனவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மன்னார் 'சவுத் பார்க்' கடலில் டைனமற் மூலம் மீன்பிடியில் ஈடுபட்ட மீனவர்கள் கைது செய்யப்பட்டு பொலிசில் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். இச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை இடம் பெற்றுள்ளது.இவர்கள் மன்னார் நீதி மன்றத்தில் முற்படுத்தப்பட்டுள்ளனர் (மி)

## மன்னாரில் மீள் குடியமர்த்தும் பணி துரித கதியில் நடைபெறுகின்றது

(மன்னார்)

மன்னாரில் இருந்து இடம்பெயர்ந்து சென்றவர்களை அங்கு மீளக்குடியமர்த்தும் பணி தீவிரமாக இடம்பெற்று வருகின்றது.தற்போதைய சமாதான காலத்தில் இங்கிருந்து இடம் பெயர்ந்து இந்தியா உட்பட இலங்கையில் பல இடங்களிலும் அகதிகளாகத் தங்கி இருந்தோர் தற்போது தமது சொந்த இடங்களுக்குத் திரும்பிக் கொண்டிருக்கின்றனர்.

இவர்களை மீளக்குடியமர்த்தும் பணியினை மன்னார் பிரதேச செயலகம் துரிதமாக மேற்கொண்டு வருகின்றது. (மி)

## தமிழ் அரசியல் கைதிகள் நிலை குறித்து இன்று ஆராய்வு

தம்மை விடுதலை செய்யுமாறு கோரி தமிழ் அரசியல் கைதிகள் நடத்தி வருகின்ற சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் தொடர்பாக நடவடிக்கை எடுப்பது குறித்து முடிவுகளை எடுப்பதற்காகவும் தமிழ் தேசிய கூட்டமைப்பு இன்று கூடவுள்ளது.

இக் கூட்டத்தில் தமிழ்க் கைதிகளின் விடுதலை குறித்து பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்துப் பேசவேண்டும் என்றும், சனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவுக்கு இது விடயம் தொடர்பாக மகஜர் ஒன்றினை அனுப்ப வேண்டும் என்றும் வன்னி மாவட்ட எம்.பி செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்துள்ளார். கைதிகளின் போராட்டத்திற்கு ஆதரவாக வெகுஜனப் போராட்டங்களை நடத்த வேண்டும் என்றும் இக் கூட்டத்தில் யோசனைகள் முன்வைக்கப் படவுள்ளதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார்.

## இளைப்பாறிய கிராம சேவையாளர்கள் மீண்டும் சேவையில் இணைப்பு

(மன்னார்)

மன்னாரில் இளைப்பாறிய கிராம சேவையாளர்கள் மீண்டும் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.

மாந்தை மேற்கு உதவி அரச அதிபர் பகுதியில் கிராம சேவையாளர்களுக்குப் பற்றாக்குறை நிலவுவதால் முன்னார் அரசாங்க அதிபர் உடனடியாக இவர்களைச் சேவையில் இணைத்துக் கொள்ளும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

மன்னாரில் தற்போது பெருமளவானோர் மீளக்குடியேறி வருவதும் குறிப்பிடத்தக்கது. (மி)

## வட்டக்கச்சியில் கால்நடை சிகிச்சை

(அலுவலக செய்தியாளர்)

வட்டக்கச்சிப் பிரதேசத்திலும் கால்நடை வைத்திய சேவைகள் நடைபெறவுள்ளது.

கரைச்சிப் பிரதேச இராமநாதபுரம் உப பணிமனையில் மாதத்தில் முதலாம் வெள்ளியும் மூன்றாம் வெள்ளியும் கால்நடைகளுக்குச் சிகிச்சை அளிக்கப்படவுள்ளது என கிளிநொச்சி கால்நடை வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (அ)

## பெண்கள் எழுச்சி நாள் சிறப்புக் கருத்தமர்வு

உலகப் பெண்கள் எழுச்சி நாளான மார்ச்-8ஆம் திகதியை முன்னிட்டு முள்ளியவளைப் பிரதேசத்தில் பெரியளவில் பெண்களுக்கான கருத்தரங் கொன்று அண்மையில் நடைபெற்றது.

முள்ளியவளைப் பிரதேச பெண்கள் மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் செல்வி நந்தினியின் ஒழுங்குபடுத்தலில் முள்ளியவளை மாவீரர் மண்டபத்தில் பிரதேச அரசியல் துறைப்பொறுப்பாளர் இ.சரவணன் தலைமையில் இந்நிகழ்வு ஆரம்பமானது.

பிரதேசத்திற்குட்பட்ட அரச, அரசசார்பற்ற நிறுவனப் பெண் பணியாளர்கள், பாடசாலைஅதிபர், ஆசிரியை. கள், மாதர் சங்கத்தினர் நலன் விரும்பிகள் எனப் பெருமளவான பெண்கள் கலந்து கொண்ட இக் கலந்துரையாடலில், முல்லை மாவட்ட மகளிர் அரசியல் துறைப் பொறுப்பாளர் செல்வி .தமிழ் நிலவு, முல்லைமாவட்ட தேசிய எழுச்சி பேரவைப் பொறுப்பாளர் நவாஸ் ஆகியோர் சிறப்புக் கருத்துரை வழங்கியதையடுத்து முள்ளியவளைப் பிரதேச பெண்கள் மேம்பாட்டுக்குழு தெரிவு செய்யப்பட்டது. (ஆ)

## யாழ்.இல் காணாமல் போனோர் குறித்து விசாரணைகள் மீண்டும் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வடபகுதியில் 1996 ஆம் ஆண்டு காலப்பகுதியில் படையினரால் கைது செய்யப்பட்டுக் காணாமல் போனோர் பற்றிய விசாரணைகள் மீண்டும் ஆரம்பமாகியுள்ளன.

இதற்கென மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட முன்னாள் அரச அதிபர் கலாநிதி தேவநேசன் நேசையா தலைமையிலான குழு யாழ்ப்பாணம் வந்துள்ளது.

இக் குழுவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கொடிகாமம் அரசினர் தமிழ்கலவன் பாடசாலையில் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதேபோல் நேற்று முன்தினம் காலை 9.00மணிமுதல் 12.30 மணிவரை சுண்டுக்குழி சோமசுந்தரம் அவெனியுவிலுள்ள மனித உரிமைகள் ஆணைக்குழுவில் விசாரணைகளை நடத்தியுள்ளனர்.

இவ் விசாரணைக் குழுவில் கலாநிதி தேவநேசன் நேசையா, இணைப்பாளர் எம்.சி. எம். இக்பார், திருமதி ஜெசிமா இஸ்மாயில், கமிலஸ் பெர்னாண்டோ, ஆகியோர் இடம் பெற்றுள்ளனர்.

## மாணவர்கள் கௌரவிப்பு

(அலுவலக செய்தியாளர்)

இலங்கைச்செஞ்சிலுவைச் சங்கத்தினால் நெறிப்படுத்தப்பட்ட கணினிப் பயிற்சியில் தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு நடாத்தப்பட்ட சித்திரப் போட்டியில் கலந்து கொண்டு வெற்றி பெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கும் நிகழ்வும் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 9ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி இலங்கை செஞ்சிலுவைச் சங்கப்பணிமனையின் கேட்போர் கூடத்தில் இந் நிகழ்வு நடைபெற வுள்ளது. (அ)

## நிரந்தர நியமனக் கடிதங்களின்றி 40 ஆயிரம் ஆசிரியர்கள் சேவை

(கொழும்பு)

நாடு முழுவதும் பணிபுரியும் ஆசிரியர்களில் 40 ஆயிரம் பேருக்கு இதுவரை நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கப்படவில்லை எனக் கல்வி அமைச்சினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வு ஒன்றின் மூலம் தெரியவந்துள்ளது.

அரச சேவையில் நியமிக்கப்படும் ஆசிரியர்களுக்கு மூன்று வருட காலத்தின் பின்னர் கட்டாயம் நிரந்தர நியமனம் வழங்கப்பட வேண்டும்.

ஆனால்,கல்வி அமைச்சு இவர்களுக்குரிய நியமனக் கடிதங்களை அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கவில்லை. இதற்குச் சில அதிகாரிகளின் அசமந்தப் போக்கே காரணமாகும் எனவும் கூறப்படுகின்றது.

குறிப்பாக மாகாண சபையின் கீழ் இயங்கும் பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்களின் தகவல்கள், விபரங்களைக் கல்வி அமைச்சுக்கு அனுப்பி வைக்காததும் ஒரு காரணம் எனவும் கல்வி அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## சிந்தனைக்கு

எமது சொந்தப் பலத்தில் நாம் வேரூன்றி நிற்பதால், மற்றவர்களின் அழுத்தங்களுக்குப் பணிந்துகொடாமல் எம்மால் தலைநிமிர்ந்து நிற்கமுடிகிறது.

- தமிழீழத் தேசியத் தலைவர்.



ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 05-03-2003

## நோக்கம் வேறு

வட பகுதிக் கடற்பரப்பில் அத்துமீறிப் பிரவேசித்து மீன் பிடியில் ஈடுபடும் தமிழக மீனவர்களுக்கும் – தமிழீழ மீனவர்களுக்கும் இடையில் மோதல்கள் இடம்பெறும் அளவிற்கு நிலைமை மோசமாகியுள்ளது. இந்த ரீதியில் நேற்று முன்தினம் பேசாலைக் கடற்பரப்பிற்குள் அத்துமீறிப் பிரவேசித்த தமிழக மீனவர்களுக்கும் – தமிழீழ மீனவர்களுக்கும் இடையிலான மோதல்கள் இரு தரப்பிலும் பலர் வைத்திய சாலையில் அனுமதிக்கப்படும் அளவிற்கு மிக மோசமான கட்டம் வரைக்கும் சென்றுள்ளது.

தமிழக மீனவர்கள் தமிழீழக் கடற்பரப்பிற்குள் அத்துமீறிப் பிரவேசித்து மீன் பிடித்தலில் ஈடுபடுவதன் காரணமாக தமிழீழ கடல்வளம் சுரண்டப்படுகின்றது, அழிக்கப்படுகின்றது, என்பது மட்டுமல்ல பிரச்சினை, தமிழீழ மீனவர்களின் தொழில் உபகரணங்களும் அழிவுக்குள்ளாகின்றன என்பது முக்கியமானதொரு விடயமாகும்.

ஏற்கனவே பெரும் இராணுவ அழுத்தங்களினால் பொருளாதார ரீதியில் நொடிந்து போயுள்ள தமிழீழ மீனவர்களின் தொழில் உபகரணங்கள் – மூலதனம் – அழிக்கப்படுவதானது அவர்களுக்குச் சிற்றத்தையும் கோபத்தையும் ஏற்படுத்துவது இயற்கையே. இவ்விடயத்தில் அவர்களால் பொறுமை காக்க முடியாது இருப்பதும் ஆச்சரியத்துக்குரியதல்ல.

இதேவேளை, தமிழக மீனவர்கள் வடபகுதிக் கடலில் அத்துமீறிப் பிரவேசிப்பதும், மீன் பிடிப்பதும் ஒன்றும் சிறிலங்கா அரசாங்கத்திற்கோ அதன் கடற்படைக்கோ தெரியாததொன்றல்ல. பல கடற்றொழிலாளர் சங்கங்கள் இதனை சிறிலங்கா அரசிற்குப் பலதடவை சுட்டிக்காட்டியுள்ளதோடு ஊடுருவலைத் தடுத்து நிறுத்துமாறும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

ஆனால், சிறிலங்கா அரசோ, அதன் கடற்படையோ இவ்விடயத்தில் பெரியளவில் அக்கறை காட்டவில்லை. ஆனால் சிறிலங்கா அரசாங்கம் உத்தரவிடுமானால் கடற்படையினால் இது தடுத்து நிறுத்த முடியாததொரு விடயமல்ல.

அதாவது, தமிழீழ மீனவர்களின் மீன்பிடி எல்லைகளை நிர்ணயித்து அவற்றிக்கு அப்பால் செல்லவிடாது தடுத்து நிறுத்தும் கடற்படையால், தமிழக மீனவர்கள் வடபகுதி கடற்பரப்பிற்குள் பிரவேசிப்பதை தடுத்து நிறுத்துதல் என்பது கடினமானதொரு காரியமல்ல.

அது மட்டுமல்ல, வட பகுதிக் கடற்பரப்பில் விடுதலைப் புலிகளின் வெளியுலகக் கடல் வழித்தொடர்பைக் கட்டுப்படுத்துதல் என்ற ரீதியில் சிறிலங்கா கடற்படை தொடர்ச்சியாக தீவிர ரோந்துப் பணிகளில் ஈடுபட்டுள்ளது. இந்நிலையில் தமிழக மீன்பிடிப் படகுகளைத் தடுத்து நிறுத்த முயலாமை வேறு நோக்கம் கொண்டதென்றே கூறுதல் வேண்டும்.

அதாவது தமிழக மீனவர்களுக்கும், தழிழீழ மீனவர்களுக்கும் இடையில் மோதல்கள் உருவாகி, இறுதியில் தமிழீழ மக்களுக்கும், தழிழக மக்களுக்கும் இடையிலான நிரந்தரப் பகையாக இதனை வளர்த்தெடுத்து விடுதல் என்பதே நோக்கமாக இருத்தல் வேண்டும். அதாவது வரலாற்று ரீதியாக இருந்து வரும் தாய் – சேய் உறவு போன்ற தொடர்பை பகை உணர்வாக மாற்றிவிடும் நோக்கம் கொண்டதாகும். இதற்குத் தமிழகத்திலுள்ள சில அரசியல் சக்திகள் கூட துணையாகவே உள்ளன.

சிறிலங்கா ஆட்சியாளர்கள் எப்பொழுதுமே தமிழகம் குறித்து அச்சம் கொண்டவர்களாகவே இருந்து வந்துள்ளனர். இலங்கைத் தமிழருக்குப் பாதுகாப்பானதொரு பெரிய பின்புலம் உள்ளதென்பது, அவர்களது ஆழ்மனத்துச் சிந்தனையாகும். ஆகையினால் இரு தரப்பினிரிடையேயும் மோதலைத் தூண்டிப் பகை உணர்வை வளர்த்தெடுப்பதன் மூலம் இலங்கைத் தமிழருக்கு உள்ளதென அவர்கள் கருதும் பாதுகாப்பான பின் புலத்தை இல்லாது ஒழித்துவிட விளைவதையே தற்போதைய அவர்களின் நடவடிக்கைகள் வெளிப்படுத்துகின்றன.

அவ்வாறு இல்லாதுவிடில் கடற்பரப்பில் மீனவர்களுக்கு இடையில் மோதல்கள் இடம்பெறும் அளவிற்கு நிலமை மோசமடையாது தடுத்திருக்கமுடியும். ஒரு படகிலோ அன்றி இரு படகிலோ இடம் பெறும் கடத்தல்களைத் தடுத்து நிறுத்தத் தயார் நிலையில் இருக்கும் அதிவேக ரோந்துப் பீரங்கிக் கலங்களையும், யுத்தக் கப்பல்களையும் கொண்ட சிறிலங்கா கடற்படையால் ஆறு, ஏழு படகுகளில் வரும் மீனவர்களைத் தடுத்து நிறுத்த முடியாது எனின் அது எவ்வாறு ஏற்றுக்கொள்ளத் தக்க விளக்கமாகிவிட முடியும்?

# பொ.ஐ முன்னணி - ஜே.வி.பி கூட்டணி அரசைப் பதவி கவிழ்ப்பதற்கானதே!

### அரசியல் அவதானிகள் ஆரூடம்

(கொழும்பு)

பொதுஜன ஐக்கிய முன்னணிக்கும், ஜே.வி.பி க்கும் இடையில் மேற்கொள்ளப்படவிருக்கும் புரிந்துணர்வு ஒப்பந்தமானது ஆளும் கட்சியைப் பதவியிலிருந்து கவிழ்ப்பதற்கு மட்டுமேயன்றி தேர்தல் நடவடிக்கைகளுக்கு அல்ல என அரசியல் அவதானிகள் குறிப்பிட்டுள்ளனர்.

இரு கட்சிகளுக்கும் இடையிலான கூட்டு ஒப்பந்தம் தொடர்பாக ஆரம்பத் தீர்மானத்தின் போது இரு கட்சிகளும் இணைந்து பொதுத்தேர்தலில் போட்டியிடுவது என்னும் முடிவுக்கு வந்திருப்பினும் அரசாங்கத்தைப் பதவியிலிருந்து நீக்குவதே பிரதான நோக்கமாக இருக்கின்றது என சனாதிபதி எடுத்துக் கூறியதை அடுத்து ஒப்பந்தம் பொதுத் தேர்தலுடன் தொடர்பு அற்றதாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்குக் கிழக்குப் பிரச்சினை தொடர்பாக இரு பகுதியினரும் கடந்த வாரங்களில் தீவிர பேச்சுக்களில் ஈடுபட்டிருந்தனர். அதன்போது ஜனாதிபதி கூறியிருப்பதாவது, 2000ஆம் ஆண்டு பொ.ஐ.மு வால் சமர்ப்பிக்கப்பட்ட அரசியல் அமைப்பில் குறிப்பிட்டுள்ள அதிகாரப் பகிர்வு வரையறைக்கு உள்ளாகாமல் இருக்க வேண்டும் என்பதே. ஆயினும் ஜே.வி.பி கருதுவது அதிகாரம் நிர்வாக முறையில் மட்டுமே இருக்க வேண்டும் என்பதே.

இந்தக் கருத்து முரண்பாடு காரணமாக வடக்கு - கிழக்குப் பிரச்சினை ஒப்பந்தத்தில் இருந்து நீக்கப்படும் எனத் தெரிகிறது. அவ்வாறில்லையெனில் ஜே.வி.பி சமஷ்டித் தீர்வுக்கு இணங்க வேண்டும் என்பதே பொ.ஐ.முன்னணியின் கருத்தாகும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும் இப் பிரச்சினை தொடர்பாக எதிர்வரும் வாரங்களில் மேலும் பல பேச்சுக்கள் இடம் பெறலாம் என அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

# அரசாங்க ஊழியர்களின் சம்பளம் 4000 ரூபாவினால் அதிகரிக்க வேண்டும்

### வலியுறுத்தி போராட்டத்திற்கு முயற்சி

அரசாங்க ஊழியர்களுக்கு நாலாயிரம் ரூபா சம்பள உயர்வு வழங்குமாறும், அதிகரித்துச் செல்லும் ஒவ்வொரு வாழ்க்கைப் புள்ளிக்கும் ஐந்து ரூபா அதிகரிப்பை வழங்குமாறும் கோரி சம்பள உயர்வுக்கான அரசாங்க சேவைகள் குழு இரு நாட்கள் வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடத் தீர்மானித்துள்ளது.

இவ் வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்பான இறுதித் தீர்மானத்தை எடுக்கும் முகமாக எதிர்வரும் 11 ஆம் திகதி மேற்படி குழுவைச் சேர்ந்த தொழிற் சங்கங்கள் கூடி ஆராயவுள்ளன.

ஒய்வூதிய வெட்டை அமுல்படுத்தாதே, பொது வளங்களைத் தனியார் மயப்படுத்தாதே, ஒய்வூதியத்தை அதிகரிக்க வேண்டும், வாழ்க்கைச் செலவைக் கட்டுப்படுத்து. ஆகிய கோரிக்கைகளை மேற்படி குழுவினர் முன்வைக்கவுள்ளனர்.

சம்பள உயர்வுக்கான அரசாங்க சேவைகள் கமிட்டியில் 30க்கு மேற்பட்ட தொழிற் சங்கங்கள் அங்கம் வகிக்கின்றன.

முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகள் தொடர்பாக அனைத்து அரசாங்க நிறுவனங்களிலும் விழிப்புணர்வூட்டும் கூட்டங்களை நடாத்தவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# வனவள பாதுகாப்புப் பிரிவினருக்கு ஆயுதங்கள், குண்டு துளைக்காத உடைகள்

(கொழும்பு)

கண்காணிப்புப் பணிகளில் ஈடுபடும் வனவளப் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகளுக்கு ஆயுதங்களும், குண்டு துளைக்காத உடைகளும் வழங்க சிறிலங்கா அரசு தீர்மானித்துள்ளது.

இந்த வனவளப் பாதுகாப்புப் பிரிவு அதிகாரிகள் அண்மைக் காலமாக தாக்குதல்களுக்குள்ளாகி வருவதைத் தொடர்ந்தே இந்த நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், இவ்வாறு கண்காணிப்புப் பணியில் ஈடுபட்ட சிலர் தாக்குதல்களில் பலியாகியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. இதனையடுத்து எடுக்கப்பட்ட தீர்மானத்தின்படி வாகனங்கள், ஆயுதங்கள், குண்டு துளைக்காத உடைகள் என்பன வழங்கப்படவுள்ளன.

## சிகிச்சை

கிளிநொச்சி கட்டம் 1 வைத்தியசாலையில் மார்பு நோய்க்கான சிகிச்சை நடைபெறவுள்ளது. மருத்துவ பரிசோதனைக்குத் தோற்றவுள்ள அரசாங்க அலுவலர்களும், அக்கராயன் மருத்துவமனையில் மார்பு நோய்க்கான சிகிச்சை பெறும் நோயாளர்களும் இன்று கிளிநொச்சியில் அமைந்துள்ள கட்டம் - 1 வைத்தியசாலைக்குச் சமுகம்தருமாறு மாவட்ட வைத்திய அதிகாரி தெரிவித்துள்ளார். (பா)

# பிரதமர் ரணில்-நம்பியார் புதுடில்லியில் சந்திப்பு.

(கொழும்பு)

இந்தியாவிற்குச் சென்ற பிரதமர் ரணில் விக்கிரமசிங்க முன்னாள் இராணுவத் தளபதி சதீஸ் நம்பியாரைச் சந்தித்து உரையாடியுள்ளார்.

வடக்கு - கிழக்குப் பகுதியில் உயர்பாதுகாப்பு வலயம் குறித்தும் அதில் மக்களை மீளக்குடியேற்றுவது குறித்தும் ஆராய்வதற்காக இலங்கைக்கு வந்துசென்ற சதீஸ் நம்பியார் ஜப்பானில் நடைபெறவுள்ள அரசு-புலிகள் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு முன்னர் சிறிலங்கா அரசாங்கத்திடம் தனது அறிக்கையைச் சமர்ப்பிப்பார் என எதிர்பார்ப்பதாக அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

# பாதாள உலகக்குழு-பொலிஸ்மோதல் : ஒருவர் பலியானார், ஐவர் படுகாயம்!

(கொழும்பு)

ஆயுதமேந்திய பாதாள உலகக் குழுவினருக்கும் வெலிக்கடைபொலிசாருக்கும் இடையே துப்பாக்கி சூடு, குண்டு வீச்சு என்பவற்றைப் பாவித்து மோதல் ஏற்பட்டுள்ளது.

கடந்த முதலாம் திகதி இரவு 9.45 மணியளவில் ஏற்பட்ட மோதலில் பாதாள உலகக் குழுவினரின் தலைவர் ஒருவர் பலியாகியுள்ளதுடன் பொலிஸ் அதிகாரி ஒருவரும் காயமடைந்துள்ளார். இந்தச் சம்பவத்தில் அகப்பட்ட பள்ளி மாணவன் உட்பட நான்கு பொது மக்களும் காயம் அடைந்துள்ளனர். காயமடைந்த பொலிசார் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

மேலும் இச்சம்பவம் பற்றி தெரியவருவதாவது, ஆரம்பத்தில் குறிப்பிட்ட இருகுழுக்களுக்கிடையில் மது விற்பனை தொடர்பாக எழுந்த பிரச்சினையில் ஒரு குழுவினர் மற்ற குழுவின் வீடு கடை என்பவற்றைத் தாக்கி பாடசாலை மாணவி ஒருவரையும் கடத்திச் சென்றுள்ளது. இச்செய்தியை அறிந்த பொலிசார் எடுத்த நடவடிக்கையை அடுத்து இரு பகுதியினருக்குமிடையே மோதல் வெடித்துள்ளது. இதன் போதே சந்தேக நபர் ஒருவர் கொல்லப்பட்டதுடன் பொலிசார் ஒருவரும் காயமடைந்துள்ளார். இச் சம்பவம் அப்பகுதி வாழ் மக்களை கிலிகொள்ளச் செய்துள்ளதாக அறியவருகிறது.

# இராணுவத்திலிருந்து தப்பி ஓடியோரை சேவையிலிருந்து நீக்கத் தீர்மானம்

படையிலிருந்து தப்பியோடிய இராணுவத்தினரை சட்டபூர்வமாக சேவையிலிருந்து நீக்கவும், மீண்டும் சேவையில் இணைய விரும்பும் இராணுவத்தினரை இணைத்துக்கொள்ளவும் இராணுவத் தலைமையகம் தீர்மானித்துள்ளது.

படையிலிருந்து தப்பிச் சென்றவர்களுக்கு சட்டபூர்வமாக சேவையிலிருந்து விலகும் சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளதாகவும், பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமைச் செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. படையிலிருந்து தப்பிச் சென்று மூன்று வருடங்கள் கடக்காத அதேவேளை, அந்தக் காலப் பகுதியில் குற்றச்செயல்களில் ஈடுபடாதவர்கள் மாத்திரமே மீண்டும் சேவையில் ஈடுபடுத்தப்படுவர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குற்றச் செயல்களில் ஈடுபட்டதாக நீதிமன்றத்தினால் தடுத்து வைக்கப்பட்டுள்ள இராணுவத்தினர் சேவையிலிருந்து விலக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# சுப்பர் சிக்ஸிற்குள் சிம்பாப்வே; பாக்., இங்கிலாந்து அவுட்!

(ஹராரே)

சிம்பாப்வே பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் நேற்று நடைபெற்ற போட்டி மழை காரணமாக வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. இரண்டு அணிகளுக்கும் தலா இரண்டு புள்ளிகள் வழங்கப்பட்டன.

இதனையடுத்து சிம்பாப்வே அணி சுப்பர் சிக்ஸிற்கு தகுதி பெற்றது. இதன் மூலம் பாகிஸ்தான், இங்கிலாந்து அணிகள் சுப்பர்சிக்ஸிற்கு தகுதி பெறும் வாய்ப்பை இழந்துள்ளன.

# இந்திய மீன்பிடிப் படகுகளால் பாரிய பிரச்சினை ஏற்பட்டுள்ளது!

## மன்னார் மீனவர் சங்க உப தலைவர் யுவான்

(மன்னார்)

இந்திய மீன்பிடி றோலர்கள் எமது கடற்பரப்பில் தொழிலில் ஈடுபடுவதனால் எமக்குப் பாரிய பிரச்சினைகள் ஏற்படுகின்றது என மன்னார் மீனவர் சங்க உப தலைவர் யுவான் தெரிவித்துள்ளார்.

கடந்த இரு தினங்களாக அத்துமீறி மீன்பிடித்த இந்திய மீனவர்கள் பிடிக்கப்பட்டு தடுத்து வைக்கபபட்டது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

மேலும் அவர் எமது மீனவர்கள் இரவு வலைகளை கடலில் விட்டுவிட்டு கரைக்கு வந்து விடுவர். அந்த நேரம் அப்பகுதிக்கு வரும் இந்திய மீனவர்கள் எமது வலைகளை சேதப்படுத்துகின்றனர். இது தொடர்ந்த வண்ணமுள்ளது. மேலும் இந்திய றோலர்களால் கடலிலுள்ள பாசிகள், காளான்கள் அள்ளப்படுகின்றன. இது மீனினத்தின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்தி கடல் வளத்தைக் குன்றச் செய்துவிடுகிறது. இவை சம்பந்தமாக கடந்த காலத்தில் அதிகாரிகளுக்கு அறிக்கை மூலமாக முறையிட்டு இந்திய றோலர்களை எமது பகுதிக் கடலுக்குள் வரக்கூடாதெனக் கூறியிருந்தோம். இதுவரை அதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. இந்நிலையில் தான் தற்போதைய நடவடிக்கை இடம் பெற்றுள்ளது என்றும் கூறினார்.

# முறிகண்டியில் வீதி விபத்தில் சிறுவன் படுகாயம்

(அலுவலக செய்தியாளர்)

ஏ-9 நெடுஞ்சாலையில் முறிகண்டியில் இடம்பெற்ற விபத்து ஒன்றில் சிறுவன் ஒருவர் காயமடைந்தார்.

நேற்றுப் பகல் 2.30 மணியளவில் கிளிநொச்சி நோக்கிச் சென்று கொண்டிருந்த 'எல்வ்' ரக வாகனம் ஒன்று வீதியால் நடந்து சென்று கொண்டிருந்த சிறுவன் மீது மோதியது. இதன்போது 154 ஆம் கட்டை கிளிநொச்சியைச் சேர்ந்த தங்கவேல் கமல் (வயது 12) என்ற சிறுவன் தலையில் காயமடைந்துள்ளார்.

வாகனத்தை ஓட்டிச் சென்ற சாரதி விபத்தைத் தவிர்க்க முற்பட்டபோதும் இவ்விபத்து நிகழ்ந்துள்ளதாகவும் காயமடைந்த சிறுவனை மேற்படி வாகனச் சாரதி வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்றதாகவும் காவல்துறையின் வீதிப் போக்குவரத்துப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மேற்படி சிறுவன் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா மருத்துவமனைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். (பா)

# கச்சதீவு அந்தோனியார் திருநாள் ஆரம்பமாகிறது

கச்சதீவு புனித அந்தோனியார் திருநாள் நாளை மறுதினம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதன் ஆயத்த பணிகளுக்காக நெடுந்தீவு பிரதேச செயலரும் நெடுந்தீவு பங்குக்குருவும் அவர்களுடன் பொதுமக்கள் சிலரும் இன்று கச்சதீவுக்குச் செல்கின்றனர்.

7 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் திருநாள் ஒன்பதாம் திகதி காலை திருநாள் திருப்பலியுடன் நிறைவடையவுள்ளதாகவும் நெடுந்தீவிலிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# அரச ஊழியர் சம்பளத்தை அதிகரிக்கக் கோரி ஆர்ப்பாட்டம்

அரச ஊழியர்களின் சம்பளத்தை அதிகரிக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்தும் ஆர்ப்பாட்டமொன்று நேற்று கொழும்பில் நடைபெற்றுள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் ஆட்சிபீடம் ஏறிய பின்னர் பொருட்களினதும் சேவைகளினதும் விலைகள் அதிகரித்த போதும் அரச ஊழியர்களின் சம்பளங்கள் அதிகரிக்கப்படவில்லை என ஆர்ப்பாட்டத்தை ஏற்பாடு செய்த அகில இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் கூறியுள்ளது.

இவ் ஆர்ப்பாட்டத்தில் அதிகமானோர் கலந்து கொண்டுள்ளனர். வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் சம்பளங்கள் அதிகரிக்கப்படாமை போன்ற விடயங்கள் குறித்து மக்களுக்குத் தெளிவுபடுத்தும் துண்டுப் பிரசுரங்களை ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டோர் விநியோகம் செய்துள்ளனர்.

# கொழும்பு மாநகரசபை மைதானத்தை கூட்டம் நடத்த வழங்க வேண்டும்

## பொ.ஐ.மு. பா.உ. அலவி மௌலானா

(கொழும்பு)

கட்சிக் கூட்டம் நடத்துவதற்கு கொழும்பு மாநகரசபை மைதானத்தை வழங்க வேண்டும் என்று பொதுசன ஐக்கிய முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர் அலவி மௌலான அரசாங்கத்தைக் கோரியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் வருடாந்த மாநாட்டை இம்மைதானத்தில் நடத்த முடியுமானால் ஏன் தமது கட்சிக்கு அனுமதி வழங்க முடியாது என்று கேள்வி எழுப்பியுள்ள அலவி மௌலானா இந்த மைதானத்தை நாம் மாநாடு நடத்த அரசு தராவிடில் அனுமதியின்றி அங்கு கூட்டம் நடத்துவோம் என்று கூறியுள்ளார்.

இதேவேளை வாழ்க்கைச்செலவு அதிகரிப்பு, அரசு உடமைகளை தனியாருக்கு விற்பனை செய்தல் போன்ற நடவடிக்கைகளைக் கண்டித்து வரும் திங்கட்கிழமை பொ.ஐ.முன்னணியும் ஜே.வி.பி.யும் இணைந்து பேரணி நடத்த இருப்பதும் தெரிந்ததே. கம்பல் மைதானத்தில் ஆரம்பமாகும் இப்பேரணி கொழும்பு நகரசபை மைதானத்தில் முடிவுற்று அங்கு பொதுக்கூட்டம் நடத்த பொ.ஐ.முன்னணி ஏற்பாடு செய்துள்ளது.

### களுத்துறை...

தாக கைதிகள் கூறியுள்ளனர்..

இதேவேளை களுத்துறை கைதிகளின் உண்ணாவிரதப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து நீர் கொழும்பு மற்றும் அநுராதபுரம் சிறைச்சாலைகளிலுள்ள தமிழ் அரசியல் கைதிகளில் 14 பேர் உண்ணாவிரதப் போராட்டத்தை நேற்று ஆரம்பித்துள்ளனர்.

### 42 தமிழக...

மீனவர்களால் பிடித்து வரப்பட்டு தடுத்து வைக்கப்பட்டுள்ளது. தெரிந்ததே.

தமிழகம் உச்சிப்புளி, கன்னியாகுமாரி பகுதிகளைச் சேர்ந்த இவர்கள் இன்று சிறிலங்கா அரசின் சட்ட நடவடிக்கைக்கு உட்படுத்தப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

### உப குழுவின்...

ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். ஒஸ்லோவில் கடந்த சனவரி மாதம் நடைபெற்ற நான்காம் சுற்றுப் பேச்சுக்களின் போது இவ் உப குழு அமைக்கப்பட்டமை தெரிந்ததே.

### போர்நிறுத்த...

றுத்த ஒப்பந்த அமுலாக்கல் தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டுள்ளன. இச்சந்திப்பின்போது மட்டு. அம்மாறை மாவட்ட சிறப்புத் தளபதி ரமேஸ், மருத்துவப் பிரிவுப் பொறுப்பாளர் வாமன் ஆகியோரும் போர்நிறுத்த கண்காணிப்புக் குழுவின் மட்டக்களப்புத் தலைவரும் கலந்துகொண்டுள்ளனர். 23 ஆவது பிரிவுக் கட்டளை அதிகாரி மற்றும் படைத்துறை அதிகாரிகளையும் அவர் சந்தித்துள்ளார். போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவருடன் பாதுகாப்பு ஆலோசகர்கள் இருவரும் கிழக்கிற்குச் சென்றமை குறிப்பிடத்தக்கது.


## தேடப்படுகிறார்



சூராவத்தை சுன்னாகத்தைச் சேர்ந்த இராசநாயகம் யூட் ராசகுமார் என்பவரை அவரது தந்தையாரான F.M இராசநாயகம் தேடுகிறார். இவர் எங்கிருந்தாலும் கீழ்க் காணும் முகவரியில் உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

ம. அன்ரனீஸ்
முடியரசி பதிப்பகம்,
கிளிநொச்சி.

(2269)


### சிறுவர்களுக்கான...

அவர்களும், சமாதான செயலக பணிப்பாளர் புலித்தேவன், அரசியல்துறையைச் சேர்ந்த ஜோர்ச் ஆகியோர் கலந்து கொண்டனர்.

யுனிசெப் அமைப்பின் சார்பில் யுனிசெப் அமைப்பின் இலங்கை வதிவிடப் பிரதிநிதி, வன்னிக்கான வதிவிடப் பிரதிநிதி ஆகியோர் கலந்து கொண்டனர்.

வெளியிடப்பட்ட அறிக்கையின் பிரகாரம் இம்மாதம் 10 ஆம் திகதி இருதரப்பினரும் செயல் திட்டத்திற்கான முன்வரைபை பரிமாறிக் கொள்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது. அதனைத் தொடர்ந்து புலிகள், தமிழர் புனர்வாழ்வுக்கழகம், மற்றும் சர்வதேச சிறுவர்கள் நிதியம் ஆகிய அமைப்புக்களின் பிரதிநிதிகளை உள்ளடக்கிய செயற்குழு கூடவுள்ளது. வரும் 14 ஆம் 15 ஆம் திகதிகளில் கூடும் இக்குழு சிறுவர்களுக்கான செயற்திட்டத்தின் செயல் வழிமுறைகளை ஆராயவுள்ளது. இம்மாத இறுதிக்குள் சிறுவர்களுக்கான செயற்திட்டத்தை இறுதி செய்வதற்கான பட்டறை ஒன்றும் நடைபெறும். இதில் தமிழீழ விடுதலைப் புலிகளும், தமிழர் புனர்வாழ்வுக் கழகமும், யுனிசெப், சிறிலங்கா அரசு மற்றும் சர்வதேச அமைப்புக்கள் பலவும் கலந்து கொள்ளவுள்ளன. இந்தப் பட்டறையைத் தொடர்ந்து சிறுவர்களுக்கான செயற்திட்டம் தொடர்பாக மாவட்ட ரீதியிலான பட்டறைகளும் நடத்தப்பட்டு செயற்திட்டத்தை மாவட்ட ரீதியில் செயற்படுத்துவது குறித்தும் ஆராயப்படவிருக்கிறது.

அத்துடன் அடுத்த மாதம் இரண்டாம் வாரமளவில் சிறுவர்களின் உரிமை தொடர்பான பயிற்சி, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் உறுப்பினர்களுக்கும் மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர்களுக்கும் வழங்கப்படவுள்ளது. போரினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்கான பராமரிப்பு நிலையம் தற்காலிகமானது. அந்த சிறுவர்களின் நலன் கருதி இந்த நிலையங்கள் சர்வதேச நிறுவனங்களினாலும் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் மற்றும் யுனிசெப் ஆகியவற்றினாலும் இணைந்து நிர்வகிக்கப்படும் என முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இந்தப் பராமரிப்பு நிலையங்கள் சிறுவர்களின் எதிர்காலத்தை நிர்ணயம் செய்ய அவர்களுக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும் என்றும் முடிவு எடுக்கப்பட்டுள்ளது என்று அந்த கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## காணி குத்தகைக்குத் தேவை

கிளிநொச்சி நகரின் மையத்திலிருந்து மூன்று (03) கிலோமீற்றர் சுற்றளவிற்குள் அண்ணளவாக ஒரு ஏக்கர் அளவுள்ள வெற்றுக்காணி தமிழீழ வைப்பகத்தின் பயன்பாட்டிற்குத் தேவையாகவுள்ளது. கிணறு இருத்தல் விரும்பத்தக்கது. காணியைக் குத்தகைக்கு வழங்க விரும்புவோர் திருநகர், கிளிநொச்சி என்னும் முகவரியில் இயங்கும் தமிழீழ வைப்பக நடுவப்பணியகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர். ஏனைய விளக்கங்கள் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

ஆளுகை மேலாளர்,
நடுவப்பணியகம்,
தமிழீழ வைப்பகம்.

(சி-7698)


இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ஆம் ஆண்டு மார்ச் மாதம் 05ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.